
# வானவில்

VAANAVIL

இதழ் – 83
கார்த்திகை 2017

ISSUE – 83
NOVEMBER 2017


# த.தே.கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு முழுத் துரோகம் இழைத்துள்ளது!




**இ**லங்கையில் மைத்திரி – ரணில் தலைமையில் அமைந்திருக்கும் மேற்கத்தைய சார்பு வலதுசாரி அரசாங்கம் நாட்டு மக்களின் எதிர்ப்பையும் மீறி புதிய அரசியல் அமைப்பு ஒன்றைக் கொண்டு வரும் பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த அரசியல் அமைப்பின் நோக்கம் நாட்டில் எழுந்துள்ள பூதாகரமான பிரச்சினைகளான பொருளாதார மந்த நிலை, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசியுயர்வு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு, இயற்கை வளங்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பது, கல்வி – சுகாதார – அரச சேவைகளை மேம்படுத்துவது, ஊடக சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் வலுப்படுத்துவது போன்றவற்றுக்கும், நாட்டின் தலையாய பிரச்சினையான இனப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பது அல்ல.

மாறாக, எந்த அந்நிய சக்திகள் இந்த அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றினார்களோ, அந்த அந்நிய எஜமானர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக நாட்டின் வளங்களை அவர்களுக்குத் தாரை வார்த்தல், விலைவாசிகளை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய வட்டிக்கடைக்காரர்களின் ஆணைப்படி அதிகரித்தல், கல்வி, சகாதார, வங்கி மற்றும் அரச சேவைகளை தனியார்மயப்படுத்தல், சிறிய தேசிய இனங்களின் தனித்துவத்தை அழித்தொழித்தல், ஊடக சுதந்திரத்தை மட்டுப்படுத்தல் போன்ற தேவைகளுக்காகவே இந்த அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பு ஒன்றைக் கொண்டு வருகிறது.

ஏற்கெனவே தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பும் இன்றைய அரசாங்கத்தின் பிரதமரான ரணிலின் மாமனாரான ஏகாதிபத்திய அடிவருடி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் அந்நிய சக்திகளின் தேவைகளுக்காக, திறந்த பொருளாதார பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்காக 1978இல் கொண்டு வரப்பட்ட ஒன்றுதான். அதுமட்டுமல்லாமல் அந்த அரசியல் அமைப்பின் கீழ்தான் எதிர்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தடை செய்யப்பட்டு, வேலைநிறுத்தங்கள் ஆயுதப்படைகளால் முறியடிக்கப்பட்டு, வேலைநிறுத்தம் செய்தோர் வேலை நீக்கம் செய்யப்பட்டு, ஊடக சதந்திரம் நசுக்கப்பட்டு, இனப் பிரச்சினை தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமாக மாற்றப்பட்டு, அரசரகால சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் என்பன அமுலாக்கப்பட்டு, நாடு சர்வாதிகாரப் பாதையில் கொண்டு செல்லப்பட்டது. அப்பொழுதும் இன்று சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு இந்த அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கெல்லாம் தலையாட்டுவது போல, அன்றும் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு ஜே.ஆர். அரசின் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கெல்லாம் தலையாட்டிக் கொண்டிருந்தார். (பிறவித் தோசமோ?)

1978 அரசியல் அமைப்பு கொண்டு


**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# போரிற்கு பின்னரான எட்டாண்டு கால இலங்கை

இலங்கை உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் முடிவுற்றபோது இலங்கையின் எதிர்காலம் எப்படியிருக்குமென்று எதிர்வு கூறுவது சாதாரணமாக எல்லோருக்குமே மிகக்கடினமாக இருந்தது. புலிகளிலிருந்து இலங்கை இராணுவம் வரை, தமிழ், சிங்கள, முஸ்லீம் இனங்களைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்களென பல ஆயிரக்கணக்கனோர் யுத்தத்தால் மடிந்திருந்தனர். இவ்வாறு மடிந்தவர்களின் எண்ணிக்கைக்கு பல மடங்கு அதிகமாகவே, காயமுற்று அங்கங்களை இழந்தவர்களும் பாரிய தழும்புகளை சுமந்தவர்களும் இருந்தார்கள். நான்கு இலட்சம் பேரளவில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இதைவிட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 13000 பேருக்கு மேற்பட்டவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் 2009 இல் நிறைய எதிர்பார்ப்புகள் இருந்தன. இனிமேல் இதேமாதிரியான அல்லது வேறெந்த வடிவிலான யுத்தமொன்று மூழுவதற்கான வாய்ப்பு இல்லையென்று பலரும் நம்பினார்கள். கால் நூற்றாண்டுக்கு மேல் நீடித்த யுத்தத்தை பலத்த இழப்புகளின் மத்தியில் முடித்து வைத்த இலங்கை அரசு, தேசிய இனப்பிரச்சனைக்கான நிரந்தரமான தீர்வொன்றினைக் காண்பதிலும் முழுமூச்சாக ஈடுபடலாமெனவும் சகல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்டது. வடக்குக்கிழக்கில் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டார்கள், எனவே புலிகள் போன்றதொரு இயக்கம் மீண்டும் முளைத்தெழவே சாத்தியமில்லையெனவும் அறுதியிட்டு சொல்லப்பட்டது. ஆனாலும் 1971 இலும் 1989 இலும் ஜே.வி.பியினரது கிளர்ச்சிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரான சூழல்களை தனித்தனியாக எடுத்து நோக்கி, அந்த நிலைமைகளை முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னரை எதிர்வு கூறுவதற்கும் பொருத்திப் பார்க்கப்பட்டது. அதாவது குறிப்பாக புலிகளின் எச்சசொச்சங்கள் ஜே.வி.பி. போன்று ஒரு பிரதான பாராளுமன்றக் கட்சியாக உருவெடுக்கலாம் என்றும், அதற்கு புலிகளை ஆதரித்த வெளிநாடுகளிலுள்ள தமிழர்களின் ஆதரவும் நிதிவளங்களும் பயன்படுத்தப்படலாம் என்றும் ஆரூடங்கள் சொல்லப்பட்டன.

யுத்தம் முடிந்து 8 வருடங்கள் முழுமையாகக் கழிந்துவிட்ட நிலையில் இன்று திரும்பிப்பார்த்தால், இலங்கை யுத்தமற்ற தேசமாகவும், இலங்கையின் எந்தப் பாகத்திலும் கிளர்ச்சிகள் எதுவும் தோன்றுவதற்கான ஒரு சிறியளவிலான வாய்ப்புகளில்லாத சூழலுமே நிலவுகின்றது. நிரந்தரமான அரசியல் தீர்வொன்றினை எய்துவதற்கான நிலைமை 'விட்டுவிட்டெரியும் மின்குமிழின் வெளிச்சமாக' இருக்கின்றது. அதாவது தீர்வு இதோ வந்துவிடும் போல் ஆரவாரங்கள் கேட்கும், பின்னர் நீர்த்துவிடும் என்ற கடந்தகால நிலைமையே தொடர்கின்றது. குரூரத்தன்மை, ஆயுதபலம், பணவளம், ஆதரவுத்தளம் போன்றவற்றால் இலங்கையையும் தமிழ் பேசும் இனங்களையும் ஆட்டிப்படைத்த புலிகள், முதலாளித்துவ ஜனநாயக அரசியலில் அல்லது தேர்தல் கட்சிகளின் வரிசையில் தனித்துவமாக இடம்பிடிக்க முடியாமல் திணறி வருகிறார்கள். ஆனால் புலிகளால் உருவாக்கப்பட்டு, புலிகளின் ஊதுகுழலாக செயற்பட்டுவந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்குக்கிழக்குத் தமிழர் தரப்பின் பெரிய தேர்தற்கட்சியாக உருவெடுத்துள்ளது.

இலங்கை அரசுமீது ஐ.நா. மனித உரிமைகள் சபை ஊடாக 'சர்வதேசம்' போர்க்குற்றச்சாட்டுகளை சுமத்தும் என்பது எவராலுமே எதிர்பார்க்கப்படாத ஒன்று. யுத்தம் முடிவடைந்து 2 வருடங்களின் பின்னரே விழித்தெழுந்த ஐ.நா. மனித உரிமைகள் சபை, யுத்தகாலத்தில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளதாக கூற ஆரம்பித்ததிற்கு பின்னணிக் காரணங்கள் இல்லாமல் இருக்க முடியாது. புலிகளைத் தோற்கடித்த இலங்கை அரசு, ஏகாதிபத்திய நலன்களுக்கு வளைந்து கொடுக்காத தன்மை கொண்டதாக நடந்து கொண்டது என்பது நிட்சயமாக முக்கியமானதொரு காரணமாக இருந்திருக்கலாம். ஏனெனில் இலங்கையில் 2015 ஆம் ஆண்டில் நடந்த ஆட்சிமாற்றத்தின் பின்னர், ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் தளர்வான, விட்டுக்கொடுக்கும் போக்குகள் தெளிவாகத் தெரிகின்றன. இதனைப் பார்க்கையில் போர்க்குற்ற விசாரணையென்பது முன்னைய அரசுக்கு மாத்திரமே எதிரானது என்பதைத் தீர்க்கமறச் சொல்லாம். அத்தோடு முன்னைய அரசுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் போர்க்குற்ற விசாரணையை தீவிரமாக முன்னெடுத்து வரும் ஆதிக்க சக்திகளுக்கும், குறிப்பாக அமெரிக்க, ஐரோப்பிய, இந்திய அரசுகளுக்கும் பாரிய முரண்பாடுகள் நிலவியிருந்தன என்பதையும் உறுதிப்படுத்தலாம்.

1971 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி. கிளர்ச்சிகள் தோற்கடிக்கப்பட்ட போதும் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டாரகள். அப்போதெல்லாம் 'சர்வதேசம்' அதைக்கண்டும் காணாமல் இருந்தது. அதற்குக் காரணம் அந்தக் கிளர்ச்சிகள் இலங்கை முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தைக் கவிழ்க்கும் நோக்கங்கொண்ட கிளர்ச்சிகளாக இருந்தன. இதனால் சர்வதேச ஏகாதிபத்தியங்கள் அமைதியாக இருந்தன. ஏனெனில் எந்தவொரு நாட்டு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்கெதிரான புரட்சி என்பது, உலக ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான புரட்சி என்பதை ஏகாதிபத்தியங்கள் நன்கு தெரிந்தே வைத்திருக்கின்றன.

புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் நிகழ்ந்த உள்நாட்டு யுத்த காலகட்டத்திலும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்தன. அப்போதெல்லாம் ஐ.நா.மனித உரிமைகள் சபை அவை தொடர்பாக அறிக்கைகள் மாத்திரமே வெளியிட்டு தன்னை மட்டுப்படுத்திக் கொண்டது. காலனி நாடுகளில் சுரண்டிய மூலதனத்தேட்டத்தை திரட்சியாக வைத்திருந்து, தங்களை அபிவிருத்தியடைந்த நாடுகளென சொல்லிக்கொள்ளும் நாடுகள், காலனியாதிக்கம் முடிவடைந்த பின்னர் தங்கள் முதலீட்டுக்காகவும் சந்தைக்காகவும் பாதுகாப்பிற்காகவும், மூன்றாமுலக நாடுகளென்று அழைக்கப்படும் அபிவிருத்தி குன்றிய நாடுகளை தங்கள் காலடியில் வைத்திருப்பதற்கு கையில் எடுத்திருக்கும் முக்கிய ஆயுதந்தான், மனித உரிமைகள் மீறல்கள் பற்றிப் பேசுவது.

யுத்ததத்திற்கு பின்னரான இலங்கை உள்நாட்டு அரசியல் என்பது முற்றுமுழுதாக நடந்து முடிந்துபோன யுத்த விளைவுகளிலேயே இன்னமும் தொங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு புறத்தில், யுத்தத்தை வென்று தென்னிலங்கை மக்களின் ஒட்டுமொத்த ஆதரவோடிருக்கும் முன்னைய ஆட்சியாளர்களை மீண்டும் ஆட்சிக்கு வராமல் அந்நிய சக்திகளுடன் துணையோடு போடப்பட்டுக் கொண்டிருக்கும் (ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகள், தேர்தல்களை பிற்போடுதல்) தடைகளும், மறுபுறத்தில், அரசியல் தீர்வு, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல், யுத்தத்தில் காணாமற்போனவர்கள் மற்றும் சிறையிலிருக்கும் புலிக்கைதிகளை விடுவித்தல் போன்றவற்றிற்கான போராட்டங்களும் இதற்கு சான்றுகள் பகிர்கின்றன.


வானவில்

தொடர்பு மின்னஞ்சல் முகவரி: sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

**மகத்தான சோவியத் ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை ஒட்டி கனடாவில் இருந்து வெளிவரும் NorthStar Compass மாத சஞ்சிகையின் 2017 ஒக்ரோபர் இதழில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் கீழே தரப்படுகிறது.**

# பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே சோசலிசப் புரட்சியின் உயிர்நாடி




மகத்தான சோவியத் ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டு விழாவை (1917 – 2017) உலகம் முழுவதுமுள்ள தொழிலாளி வர்க்கமும், மார்க்சிச – லெனினிசப் புரட்சியாளர்களும் கொண்டாடி வருகின்றனர்.

அதேநேரத்தில் எந்த சோவியத் நாட்டில் உலகிலேயே முதன்முதலாக 1917இல் தோழர் லெனின் தலைமையில் சோசலிசப் புரட்சி வெற்றி பெற்றதோ, அந்த நாட்டில் 1960களில் துரோகி நிகிட்டா குருசேவ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட முதலாளித்துவ மீட்சி 1990இல் இன்னொரு துரோகியான கோபர்சேவ் தலைமையில் பூர்த்தி செய்யப்பட்டு, இப்பொழுது அங்கு ஒரு முதலாளித்துவ அரசு பதவியில் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இரண்டாம் உலக யுத்த காலத்தில் லெனினின் வாரிசான தோழர் ஸ்டாலின் தலைமை தாங்கிய மாபெரும் சோவியத் செஞ்சேனையினால் ஹிட்லரின் பாசிசப் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டு, சோசலிச அரசுகளாகப் பரிணமித்திருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்த சோசலிச அரசுகளும் சர்வதேச ஏகாதிபத்தியத்தால் கவிழ்க்கப்பட்டுவிட்டன.

இந்த நாடுகளில் ஏற்பட்ட சோசலிசப் புரட்சிகளில் இருந்தும், பின்னர் அந்நாடுகளில் ஏற்பட்ட எதிர்ப் - புரட்சிகளில் இருந்தும், தொழிலாளி வர்க்கமும் மார்க்சிச – லெனினிசப் புரட்சியாளர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன. அவ்வாறு செய்வதின் மூலமே, ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டு விழாவை நாம் அர்த்தமுள்ள வகையில் கொண்டாட முடியும்.

எமது மகத்தான ஆசான்கள் கார்ல்மாக்சும் பிரெடரிக் ஏங்கெல்ஸ்சும் கற்றுத் தந்த மார்க்சிச தத்துவார்த்த அடிப்படையில்தான் இந்த உலகம் இருக்கும் வரையும் நாம் பயணிக்கப் போகின்றோம். எனவே தத்துவார்த்த அடிப்படையில் எமக்கு எந்தக் குழப்பமும் கிடையாது. ஆனால் அவர்களது போதனைகளைப் பின்பற்றி புரட்சிகள் வாகை சூடிய நாடுகளில் ஏற்பட்ட எதிர்ப் - புரட்சிகர மாற்றங்கள்தான் எமது ஆய்வுக்குரியவை.

சோசலிச நாடுகள் பிறழ்ந்து போனது பற்றி பல்லாண்டுகளாக பலவிதமான ஆய்வுகள் நடந்து வருகின்றன. அதுபற்றி சில விடயங்களைப் பார்ப்பது அவசியம்.

சோசலிச அமைப்புகள் வீழ்ச்சி அடைந்ததிற்கு சாராம்சமாக இரண்டு காரணங்கள் முன்வைக்கப் படுகின்றன.

ஒன்று, சோசலிசப் பொருளாதார முறைமை கைவிடப்பட்டது என்பது.

இரண்டாவது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கைவிடப்பட்டமை என்பதாகும்.

இவை இரண்டுமே முக்கியமான விடயங்கள் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் இந்த இரண்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது மிகவும் தலையாய விடயமாகும். ஏனெனில் ஒரு சோசலிச நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் கைவிடப்படும்போதுதான் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி முதலாளித்துவ சக்திகள் மீண்டும் தலைதூக்கி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுகின்றன. இதற்கு சோவியத் யூனியன் நல்லதொரு உதாரணம்.

சோவியத் யூனியனில் தோழர்கள் லெனினும் ஸ்டாலினும் கட்சிக்கும் அரசுக்கும் தலைமைதாங்கியவரை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மிகவும் கறாராகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதன் மூலமே உள்நாட்டு – வெளிநாட்டு எதிரிகளின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் யாவும் முறியடிக்கப்பட்டதுடன், மிக முன்னேறிய சோசலிச அமைப்பு முறையும் ஸ்தாபிக்கப்பட்டது.

இருந்தும், சோசலிச சமூகத்திலும் வர்க்கப் போராட்டம் தொடரும் என்ற உண்மையை லெனினும் ஸ்டாலினும் அடிக்கடி சுட்டிக் காட்டியதுடன், வெளி எதிரிகளைவிட கட்சிக்குள் இருந்தும் அரசுக்குள் இருந்தும் கூட புதிய முதலாளித்துவ சக்திகள் உருவாகுவார்கள் எனவும் எச்சரித்தனர். இறுதியில் தோழர் ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் அது நடந்தேவிட்டது.

ஸ்டாலினின் மரணத்தின் பின்னர்

கட்சியினதும் அரசினதும் அதிகாரத்தைக் கபடத்தனமான முறையில் கைப்பற்றிய குருஸ்சேவ் தலைமையிலான நவீன திரிபுவாதக் கும்பல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டதின் மூலமும், அதைக் கறாராகக் கடைப்பிடித்த தோழர் ஸ்டாலினை "சர்வாதிகாரி", "கொடுங்கோலன்" என வர்ணித்ததின் மூலமும், சோவியத் யூனியனின் சோசலிச அமைப்பைக் குழிதோண்டிப் புதைத்தனர். கட்சிக்குள்ளும் அரசுக்குள்ளும் முதலாளித்துவ சக்திகளைக் கொண்டு வருவதற்காக, "எல்லா மக்களினதும் கட்சி, எல்லா மக்களினதும் அரசு" எனப் பிரகடனம் செய்து, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான கட்சியையும் அரசையும் முதலாளித்துவ வரக்கத்தின் கட்சியாகவும் அரசாகவும் மாற்றி அமைத்தனர்.

இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது. அதாவது, தனி ஒரு நாட்டில் சோசலிச அமைப்பு உருவாகும் போது, உலக நிலைமைகளில் அதற்குச் சாதகமான நிலைமைகள் உருவாகும்வரை, அந்த நாட்டில் ஒரு சரித்திரக் காலகட்டம் முழுவதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினை சோவியத் புரட்சியுடன் ஆரம்பமான ஒரு விடயமல்ல. அது பாரீஸ் கம்யூன் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. பிரான்சின் தலைநகரான பாரீசில் தொழிலாளி வர்க்கம், ஆட்சியில் இருந்த கொடுங்கோல் அரசுக்கு எதிராக 1971 மார்ச் 18ஆம் திகதி ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்து, பிற்போக்கு அரசைத் தூக்கி எறிந்து அதிகாரத்தைக் கைப்பற்றியது.

ஆனால் பிற்போக்கு ஆளும் வர்க்கம் மூர்க்கமாகச் செயல்பட்டு அந்தக் கிளர்ச்சியை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது. அதன் காரணமாக தொழிலாளர்களின் அரசு 72 நாட்கள் மட்டுமே தாக்குப்பிடித்து இறுதியில் வீழ்ச்சி அடைந்தது.

பாரீஸ் கம்யூன் போராட்டத்தின் அனுபவங்களைப் பின்னர் தொகுத்த மார்க்ஸ், தொழிலாளி வர்க்கத்திடம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சொந்தப் புரட்சிகரப்படை ஒன்று இல்லாமையே பாரீஸ் கம்யூன் வீழ்ச்சி அடைந்தமைக்குக் காரணம் என்பதைச் சுட்டிக் காட்டினார். அப்படி ஒரு படை இருந்திருந்தால், பாரீஸ் தொழிலாளர்கள் அந்தப் படையின் உதவியுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பிரயோகித்து பாரீஸ் கம்யூன் அரசைப் பாதுகாத்திருக்க முடியும் என்பதையும் மார்க்ஸ் சுட்டிக்காட்டினார்.

மார்க்ஸின் இந்தப் போதனையை சோவியத் புரட்சியின் பின்னர் லெனினும் ஸ்டாலினும் மிகவும் கறாராகப் பின்பற்றினர். அதனால்தான் அவர்கள் காலத்தில் சோவியத் யூனியனில் முதலாளித்துவ மீட்சி ஏற்பட வாய்ப்பு இல்லாமல் போனது.

1949இல் சீனப் புரட்சி வெற்றிபெற்று அங்கு ஒரு சோசலிச அரசு அமைந்த பின்னர் அங்கும் இந்தப் பிரச்சினை உருவானது. அதுபற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை வழிநடாத்திய தோழர் மாஓசேதுங் அடிக்கடி சுட்டிக்காட்டியதுடன், கட்சியையும் அரசையும் முதலாளித்துவ சக்திகளிடமிருந்து பாதுகாத்துத் தூய்மைப் படுத்துவதற்காக 1966இல் தானே முன்னின்று "மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி" என்னும் இயக்கத்தை ஆரம்பித்தார். ஆனால் அதற்குள்ளும் புகுந்துகொண்ட எதிர்ப் - புரட்சிகர சக்திகள் கலாச்சாரப் புரட்சியின் நோக்கத்தைத் திசை திருப்பியதால், அது தோல்வியில் முடிந்தது.

மாஓவின் மரணத்தின் பின்னர், சீனாவிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் கைவிடப்பட்டு, அங்கும் படிப்படியாக முதலாளித்துவ மீட்சி ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

சாராம்சமாகத் தொகுத்துக் கூறுவதானால், முதலில் தொழிலாளி வர்க்கம் மக்கள் புரட்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது, அதன் பின்னர் தூக்கி எறியப்பட்ட பிற்போக்கு சுரண்டும் வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தொடர்ந்து பிரயோகித்து அவர்கள் மீண்டும் தலைதூக்காமல் பார்த்துக் கொள்வது, அத்துடன் நின்றுவிடாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழும் புரட்சியைத் தொடர்வது என்பன இன்றியமையாத கடமைகளாகும் இதைத்தான் பாரீஸ் கம்யூனில் இருந்து சோசலிசம் வீழ்ச்சியடைந்த நாடுகள் வரையிலான அனுபவங்கள் எமக்கு எடுத்து இயம்புகின்றன.

எனவே, தொழிலாளி வர்க்கம் ஒரு நாட்டில் உருவாகி வரும் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவது அல்ல பிரதான பிரச்சினை. கைப்பற்றிய அந்த அதிகாரத்தை எவ்வாறு பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வது என்பதுதான் தலையாய பிரச்சினை. சோசலிச நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலவிய போது ஏற்பட்ட சில தவறுகளைக் காரணங்காட்டி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையே கைவிடுவது என்பது தற்கொலைக்கு ஒப்பானது. அவ்வாறு செய்வது குழந்தையைக் குளிப்பாட்டிய அழுக்கு நீரை வீசுவதை விட்டு, அந்த நீருடன் குழந்தையையும் சேர்த்து வீசுவதற்கு ஒப்பானதாகும்.

எனவே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினையில் ஒரு தெளிவான கண்ணோட்டம் இன்றி செய்யப்படும் புரட்சிகள் எல்லாமே இலக்கில்லாமல் எய்யப்படும் அம்புகள் என்பதைப் புரிந்து கொண்டு செயற்படுவதே புரட்சிகர சக்திகளின் தலையாய கடமையாகும்.

(Northstar compass சஞ்சிகை 'சோவியத் மக்களுடனான நட்புறவுக்கும் ஒருமைப்பாட்டுக்குமான சர்வதேச சங்கம்' (International Council for Friendship and Solidarity with Soviet People) கனடாவிலிருந்து வெளியிடும் மாதாந்த சஞ்சிகையாகும். இக்கட்டுரையை எழுதியுள்ள இமாலயன் இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் உறுப்பினராகும்)

Northstar Compass Web site Address: Connexions.org/CxArchives/Northstar

---

நிலையான ஓர் இராணுவமும் காவல் படையுமே அரசு அதிகாரத்தின் முதன்மையான கருவிகளாகும்.

**– லெனின்**

# லெனின் மீது அவதூறு பொழியும் அமைச்சர் ராஜித!

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் அன்பையும் ஆதரவையும் ஒருங்கு சேரப்பெற்ற சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன எப்பொழுதும் இடக்குத்தனமாகவும் துடுக்குத்தனமாகவும் பேசி சிக்கலில் சிக்குபவர் எனப் பெயர் பெற்றவர்.

அத்தகைய அதிமேதாவி அண்மையில் சோவியத் மக்களின் மாபெரும் தலைவரும், உலகப் புரட்சியாளருமான மாமேதை லெனின் அவர்களை வம்புக்கிழுத்து அவரை அவதூறு செய்திருக்கிறார்.

அதாவது, இன்றைய இலங்கை மாணவர்கள் சிலரின் நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு லெனின் இன்று உயிரோடு இருந்திருந்தால், அவர்களது நடவடிக்கையை 'பயங்கரவாதச் செயல்கள்' என வர்ணித்திருப்பார் என ராஜித கூறியிருக்கிறார்.

நாட்டு மக்களால் வெறுக்கப்படும் 'சைட்டம்' என்ற தனியார் மருத்துவக் கல்லூரியை மூடி, நாட்டின் இலவசக் கல்வியைப் பாதுகாக்கும்படி நாட்டின் அனைத்து மாணவர்களும், வைத்தியர்களும், பொதுமக்களும் கடந்த சில மாதங்களாக இன பேதமின்றிப் போராடி வருகின்றனர். இந்தப் போராட்டங்கள் சம்பந்தமாக 'நல்லாட்சி' அரசாங்கம் பெரும் நெருக்கடியில் சிக்கித் திணறுகையில், சுகாதார அமைச்சர் ராஜித மட்டும் இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரியை எக்காரணம் கொண்டும் மூட அனுமதிக்க மாட்டேன் எனச் சண்டித்தனம் செய்து வருகின்றார்.

மாணவர்கள் தமது போராட்டத்தில் பல்வேறு வகையான வழிமுறைகளைக் கைக்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு அங்கமாக அண்மையில் சுகாதார அமைச்சை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களின் இந்தப் போராட்டத்தை அரசாங்கம் பொலிசாரின் குண்டாந்தடிப் பிரயோகம் மூலம் கலைக்க முயன்றதுடன், மாணவர் தலைவர்களையும் கைது செய்து சிறையில் போட்டது.



மாணவர்களின் இந்த அமைதி வழிக்குட்பட்ட போராட்டத்தைக் கண்டிக்கும் போதே ராஜித லெனினை வம்புக்கு இழுத்துள்ளார்.

இந்த வகையான போராட்டத்தை லெனின் தனது "இடதுசாரிக் கம்யூனிசம்: ஒரு சிறுபிள்ளைக் கோளாறு" என்ற நூலில் பயங்கரவாதம் எனக் குறிப்பிட்டுள்ளதாக ராஜித குறிப்பிட்டிருக்கிறார். இலங்கையின் மிக மோசமான ஏகாதிபத்திய பாதந்தாங்கியாகிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூட தனது வீட்டு நூலகத்தில் மார்க்சியப் புத்தகங்களை அடுக்கி வைத்திருந்ததாகக் கூறுவார்கள். ஆனால் அந்தப் புத்தகங்களை அடுக்கி வைத்துக்கொண்டு நாட்டில் என்ன செய்தார் என்பது அனைவரும் அறிந்த சங்கதி.

அதேபோல இந்த ராஜித வகையறாக்கள் மார்க்சிய நூல்களை அரைகுறையாக வாசித்துவிட்டு அல்லது யாராவது சொல்வதைக் கேட்டுவிட்டு மாணவர்களின் நியாயமான போராட்டத்தைக் கொச்சைப்படுத்த லெனினை துணைக்கு அழைக்கும் அவலத்தை என்னவென்று சொல்ல? அதுவும் எதேச்சாதிகாரம் பிடித்த ஜார் மன்னனது ஆட்சிக்கு எதிராக ஆயிரக்கணக்கான தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள் போராட்டங்களை முன்னின்று நடாத்தி, இறுதியில் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் கொடுங்கோலன் ஜாரின் ஆட்சியைக் தூக்கியெறிந்து, சோவியத் மண்ணில் மக்களாட்சியை உருவாகிய லெனினின் பெயரை ராஜித போன்ற மக்கள் விரோதிகள் உச்சரிக்கவே அருகதையற்றவர்கள் என்பதே உண்மையாகும்.

அன்றைக்கு இருந்த ரஸ்ய சூழ்நிலையில் படிமுறையான மக்கள் போராட்டத்தைக் குழப்பிய சில அதிதீவிரவாதிகளை விமர்சிக்கும் போதே லெனின் இளம்பிள்ளைக் கோளாறான கம்யூனிசம் பற்றி விமர்சனம் செய்திருந்தார். அதை மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதைப் போல அமைச்சர் ராஜித சேனரத்ன போன்றவர்கள் பேசுவது அவர்களது ஞானசூனியத்தைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

முன்பொருமுறை இந்த 'நல்லாட்சி'யின் இன்னொரு இனவாத அமைச்சரான சம்பிக்க ரணவக்கவும் தனது செய்கை ஒன்றை நியாயப்படுத்த சோசலிச கியூபாவை வம்புக்கு இழுத்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இழப்புகள் விட்டுச்சென்ற ஏக்கம்

மகனே உன்னால்
எங்களுக்கோரு கல்லறையும்
எனக்கொரு
கண்ணாடிப் படமும் கிடைத்தது
கல்லறையை நாங்கள் இழந்தோம்
நீர் சொட்டும் தறப்பால் குடிசையின் கீழ்
உன் கண்ணாடிப் படத்தை
எங்கே நான் மாட்டுவது...

குடியிருந்த வீட்டிலிருந்து
குந்தியிருந்த பலகைக்கட்டைவரை
'சவுண்ட்புறுவ்' எஞ்சினிலிருந்து
சுழலும் நாற்காலிவரை
எல்லோரும் எல்லாவற்றையும்
காவித்திரிகையில்
பொத்திப்பொத்தி வைத்திருந்த
உன் கண்ணாடிப் படத்தை, நான்
நந்திக்கடலருகே நழுவவிட்டேன்

இப்போது எங்களுக்கு
ஒரு வீடு கிடைத்தது
அதில் வாழ நீயும் இல்லை
உன் நினைவாக மாட்ட
கண்ணாடிப் படமும் இல்லை

–சந்திரசேகரம்

# தமிழ் உரைநடையின் தந்தை வீரமாமுனிவர்

○ இத்தாலியில் பிறந்தவர். கிறிஸ்தவ குருவான இவர் மதப் பிரச்சாரத்துக்காக 1710-ம் ஆண்டு கோவாவுக்கு வந்தார். அங்கிருந்து தமிழகம் வந்து சேர்ந்தார்.

○ மதத்தைப் பரப்ப உள்ளூர் மொழியைத் தெரிந்துகொள்வது அவசியம் என்பதை உணர்ந்தார். அதற்காகத் தமிழ் கற்றார். தமிழ் அவரைத் தன்னுள் இழுத்துக்கொண்டது.

○ சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் இலக்கணம், இலக்கியம் கற்றுத் தேர்ந்தார். விரைவிலேயே இலக்கியப் பேருரை கள் நடத்தும் அளவுக்குப் புலமை பெற்றார்.

○ கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி (*Constantine Joseph Beschi*) என்ற தனது இயற்பெயரை முதலில் தைரியநாதன் என்றுதான் மாற்றிக் கொண்டார்.

○ பிறகு அதுவும் சமஸ்கிருதம் என்று அறிந்து வீரமாமுனிவர் என்று வைத்துக்கொண்டார் இந்த முன்னுதாரணப் புலவர்.

○ இலக்கணம், இலக்கியம், அகராதி ஆகியவற்றைப் படைத்தார். திருக்குறளை இலத்தீன் மொழியிலும் தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திச்சூடி ஆகிய வற்றை பல்வேறு ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

○ வெளிநாட்டினர் தமிழ் கற்கவும், தமிழர்கள் பிறமொழி களைக் கற்கவும் உதவியாக தமிழ் - லத்தீன் அகராதியை உருவாக்கினார். ஆயிரம் தமிழ்ச் சொற்களுக்கு லத்தீனில் விளக்கம் கொடுத்தார்.



**தோற்றம்: 08.11.1680**

**மறைவு: 04.02.1747**

○ தொடர்ந்து 4400 சொற்களைக் கொண்ட தமிழ் - போர்ச்சுகீசிய அகராதியைப் படைத்தார். நிகண்டுக்கு மாற்றாக பெயர் அகராதி, பொருள் அகராதி, தொகை அகராதி, தொடை அகராதி ஆகிய பகுப்புகளைக் கொண்ட சதுரகராதியைத் தொகுத்தார்.

○ அந்த காலத்தில் சுவடிகளில் மெய் எழுத்துகளுக்குப் புள்ளி வைக்காமல் கோடு போடுவது வழக்கம். நெடில் எழுத்துகளைக் குறிக்க, 'ர' சேர்த்தனர். இதை மாற்றி 'ஆ', 'ஏ', 'ஓ' ஆகிய நெடில் எழுத்துகளைக் கொண்டுவந்தார்.

○ பல்வேறு தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்தன. மக்கள் சிரமமின்றிப் படிக்கவேண்டும் என்ற நோக்கில் அவற்றை உரைநடையாக்கினார்.

○ தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார். கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில் தமிழில் முதன்முதலாகப் பேச்சுத் தமிழை விவரித்தார்.

○ உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், வாமன் கதை ஆகியவற்றைப் படைத்தார்.

○ தமிழின் முதல் நகைச்சுவை இலக்கியம் என்று போற்றப்படும் 'பரமார்த்த குருவின் கதை' நூலைப் படைத்ததும் இவரே.

○ இயேசு காவியமான தேம்பாவணியை இயற்றினார். இவரைப்போல வேறு எந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம், உரைநடை என பல இலக்கிய வகைகளிலும் நூல்கள் படைத்ததில்லை.

○ தமிழில் 23 நூல்களை எழுதியுள்ளார். ஒன்பது மொழிகளில் புலமை பெற்றவர். பெயராலும், பண்பாட்டாலும் தமிழராகவே வாழ்ந்தவர், தனது 67-வது வயதில் மறைந்தார்.

நன்றி: மதி இணையத்தளம்

# எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமி காலமானார்!

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும், அக்கட்சியினால் நடாத்தப்படும் 'செம்மலர்' இலக்கிய சஞ்சிகையின் ஆசிரிய குழு உறுப்பினருமான பிரபல எழுத்தாளர் தோழர் மேலாண்மை பொன்னுச்சாமி சுகவீனம் காரணமாக தமது 66ஆவது வயதில் ஒக்ரோபர் 30ஆம் திகதி சென்னையில் காலமானார் என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

5ஆம் வகுப்பு மட்டுமே கல்வி கற்ற பொன்னுச்சாமி தமது மார்க்சியப் பார்வை காரணமாகவும், வாழ்வியல் அனுபவம் காரணமாகவும், தமது சொந்த மண்ணான கரிசல் மண்ணின் வாசனையுடன் கூடிய கலைநயம் மிக்க பல நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதியுள்ளார். அவரது எழுத்தின் மேன்மையைப் பாராட்டி சாகித்திய அக்டமி விருதும் வேறு பல விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடனும் தோழர்களுடனும் 'வானவில்' தனது கவலையையும் துக்கத்தையும் பகிர்ந்து கொள்கிறது.

## ரொறன்ரோ நகரில் குடிவரவாளர்கள் பெரும்பான்மை ஆகினர்!

உலகின் 200 இற்கும் அதிகமான நாடுகளிலிருந்து மக்கள் வந்து குடியேறி வாழும் பல்கலாச்சார நாடான கனடா நாட்டின் மிகப்பெரிய நகரான ரொறன்ரோவில் (Toronto) குடிவரவாளர்களின் (Immigrants) தொகை 52 சதவீதமாக அதிகரித்து, அவர்கள் சனத்தொகையில் பெரும்பான்மை ஆகியுள்ளனர். இந்தத் தகவல் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதேநேரத்தில் ரொறன்ரோ மாநகரைச் சுற்றியுள்ள நகர்களான Ajax, Brampton, Mississauga, Richmond Hill, Markham என்பனவற்றிலும் குடிவரவாளர்களே பெரும்பான்மை என்ற நிலையை அடைந்துள்ளனர். ரொறன்ரோவிலும், அதைச் சுற்றியுள்ள இந்த நகர்களிலும் கணிசமான அளவு இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் குடிவரவாளர்களில் 2011 – 2016 ஆண்டு காலப்பகுதியில் வந்து குடியேறியவர்களில் 62 சதவீதத்தினர் சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து வந்து குடியேறியவர்களாவர். அதேநேரத்தில், 2011இல் 59 சதவீதமாக இருந்த புதிய குடிவரவாளர்களின் தொகை, 2016இல் 39 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## ஈபிடிபி தனித்தே போட்டியிடும்!

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) தனது வீணைச் சின்னத்தில் தனித்தே போடடியிடும் என்றும், ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் உள்ள நட்பைப் பேணும் வகையில் சில இடங்களில் மட்டும் அக்கூட்டமைப்புடன் சேர்ந்து போட்டியிட எண்ணியுள்ளது என்றும், அக்கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இது பற்றி நாம் அக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரிடம் வினவிய போது, தமது கட்சி பெரும்பாலான ஏனைய தமிழ் கட்சிகளைப் போன்று இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் ஒரு கட்சி அல்லவென்றும், எனவேதான் ஏனைய இனவாத தமிழ் கட்சிகளுடன் கூட்டுச் சேராமல் தாம் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்ததாகச் சொன்னார். அத்துடன் தமது கட்சி தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு, அதேநேரத்தில் அவர்கள் எதிர்நோக்கும் நாளாந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு என்ற இரு கொள்கைகளின் அடிப்படையிலேயே ஆரம்பம் முதல் செயற்பட்டு வருவதாகவும், அக்கொள்கை தொடரப்படும் எனவும் அவர் கூறினார். இந்தக் கொள்கையைப் பின்பற்றியதற்காக முன்பு தம்மைத் ''துரோகிகள்'' எனத் தூற்றியோர், புலிகள் ஒழித்துக் கட்டப்பட்டு, யுத்தம் முடிவடைந்த பின்னர் தவிர்க்க முடியாமல் அவர்களும் தமது கொள்கையையே ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், இது தமது தீர்க்கதரிசனத்துக்குக் கிடைத்த வெற்றி எனவும் கூறினார்.

எனவே நீண்டகாலமாக இந்த யதார்த்தபூர்வமான, நடைமுறைச்சாத்தியமான, சரியான கொள்கையைப் பின்பற்றி வரும் தமது கட்சிக்கு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அமோக ஆதரவை மக்கள் வழங்குவார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அந்த முக்கியஸ்தர் மேலும் கூறினார்.

## சிறப்புற நடைபெற்ற ஒக்ரோபர் புரட்சி நூற்றாண்டு தினக் கருத்தரங்கு

மகத்தான சோவியத் ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டு நினைவு தினக் கருத்தரங்கு கனடாவின் ஸ்காபரோ நகரில் ஒக்ரோபர் 10ஆம் திகதி மாலை சிறப்பாக நடைபெற்றது. அன்று திடீரென ஏற்பட்ட கடுமையான குளிர் காலநிலையையும் பொருட்படுத்தாது பலர் இந்நிகழ்வில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர.

ஆக்கபூர்வ சிந்தனை மற்றும் செயற்பாட்டு மையத்தின் (Centre for Creative Thoughts and Action) ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு மையத்தின் செயலாளர் தோழர் க.தவபாலன் தலைமை வகித்தார். கருத்தரங்கில் சிறப்புரையை கனடிய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் தோழர் Miguel Figueroa நிகழ்த்தினார். அவர் தனது உரையில் தோழர் லெனின தலைமையில் நடைபெற்ற சோவியத் ஒக்ரோபர் புரட்சி பற்றியும், பின்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட சோசலிசக் கட்டுமானம் பற்றியும் விரிவாக விளக்கியதுடன், அங்கு பின்னர் ஏற்பட்ட முதலாளித்துவ மாற்றத்திற்கான காரணங்களையும் ஆய்வு செய்தார். அத்துடன் நிகழ்வில் பங்குபற்றியவர்கள் சிலர் எழுப்பிய கேள்விகளுக்கும் விளக்கமான பதில்களையும் அளித்தார்.

## சந்திரிக ஏன் விசாரிக்கப்படவில்லை?

### வாசு கேள்வி எழுப்பினார்!

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்க சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் இலங்கை கடற் சேவைகளில (Lanka Marine Services) நடைபெற்ற ஊழல் மோசடிகள் குறித்து அரசாங்கம் ஏன் விசாரணைகளைத் தொடரவில்லை என எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வரவு செலவத் திட்ட மூன்றாம் கட்ட வாசிப்பின் மீதான விவாதத்தின் போது கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் அங்கு கூறுகையில், இந்த ஊழல் மோசடி சம்பந்தமாக தான் 2007இல் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்ததாகவும், உச்ச நீதிமன்றம் இந்த ஊழல் அல்லது இலஞ்சம் சம்பந்தமாக ஆணைக்குழு விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்ப்பளித்தாகவும் கூறினார். அதைத் தொடர்ந்து பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்தனர். ஆனால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய பொலிசார் விசாரணைகளை இடை நிறுத்தியுள்ளனர். இன்றுவரை அது மீளவும் ஆரம்பிக்கப்படவில்லை.

சட்டத்தின் முன் அனைவரும் சமம். உச்ச நீதிமன்றம் இந்த மோசடி குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்க விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறியது. எனவே அது செய்ப்பட்டிருக்க வேண்டும். ஏன் அது செய்யப்படாமல் தாமதப்படுத்தப்படுகிறது என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என நாம் கோருகின்றோம்.

சட்டமா அதிபர் இந்த விசாரணை நடவடிக்கையை இரத்துச் செய்திருப்பது, அரசாங்கம் பெரிதாகப் பேசி வரும் அதனது சட்டம், ஒழுங்கு எனபனவற்றின் அடிப்படையிலான ஆட்சி என்பதைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறு நாணயக்கார கூறினார்.




## பிழைக்கத் தெரியாத மனிதர்!

நமது நாட்டில் சாதாரணமாக ஒரு பிரதேச சபை உறுப்பினருக்கே கோடிக்கணக்கில் சொத்துக்கள் இருக்கும். ஆனால் அப்போதைய சோவியத் யூனியனை அதனை உருவாக்கிய லெனின் மறைந்த பின்னர் 30 வருடங்களாகத் தலைமைதாங்கி உலகின் இரண்டு பெரும் வல்லரசுகளில் ஒன்றாகக் கட்டியெழுப்பிய தலைவர் ஸ்டாலின் 1954இல் இறக்கும் போது அவரிடம் இருந்த சொத்துக்கள் என்ன தெரியுமா?

ஒரு சோடி காலணிகள், இரண்டு இராணுவச் சீருடைகள், தனது வங்கிக் கணக்கில் சோவியத் நாணயமான 900 ரூபிள்கள்.

பிழைக்கத் தெரியாத மனிதர் என்று நினைக்கிறீர்களா? ஆனால் உண்மை.

## சுவாசமே நோயாக....

உலகில் கோடிக்கணக்கான மக்களுக்கு சுவாசக்கோளாறு (ஆஸ்த்துமா) நோய் இருக்கின்றது. இவர்களில் 4 மில்லியன் (40 இலட்சம்) பேர் வருடந்தோறும் இந்த நோயினால் இறக்கின்றனர். கனடாவைப் பொறுத்தவரை 3 மில்லியன் மக்கள், அதாவது மொத்த சனத்தொகையில் 10 சதவீதமானோர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## தப்பியோடிய ஞானப்பிரகாச சுவாமிகள்!

யாழ்ப்பாணம் உட்பட ஈழத்தின் கரையோரப் பகுதிகளைப் போர்த்துக்கேயர் ஆட்சி செய்த காலப்பகுதியிலே போர்த்துக்கேயரினால் மேற்கொள்ளப்பட்ட சமய சமூக விரோதச் செயல்களினால் தமிழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தங்களின் உணவுக்காக யாழ்ப்பாணக் குடிகள் ஒவ்வொருவரும் முறைவைத்து ஒவ்வொரு கொழுத்த பசுவைக் கொடுக்க வேண்டுமென்னும் சட்டம் போர்த்துக்கேயரினால் கட்டாயமாக்கப்பட்டது. வாலிபப் பராயத்தை அடைந்த ஞானப்பிரகாசருக்கும் ஒருநாள் குறிக்கப்பட்டது. சமயப் பற்றிலே ஊறிநின்ற ஞானப்பிரகாசர், பசுவைக் கொல்லுதலாகிய பாவத்துக்கு ஆளாகாமல் அதனைத் தவிர்ப்பதற்கான வழிகளை ஆராய்ந்து பார்த்ததார். அவருக்கென்று குறிக்கப்பட்ட நாளுக்கு முந்திய நாள், இரவோடு இரவாக தமிழ் நாட்டுக்குத் தப்பியோடிவிட்டார்.

(இத்தகவல் கிழக்கிலங்கையைச் சேர்ந்த வித்துவான், தமிழ் ஒளி க.செபரத்தினம் B.A, M.Litt.Dip.in.Ed எழுதிய 'தமிழ்நாடும் ஈழத்தமிழ்ச் சான்றோரும்' என்ற நூலில் வெளியிடப்பட்டுள்ளது)

## ஒரு தெருக் கலைஞனின் முன்னுதாரணம்!

பிரித்தானிய வீதிக் கலைஞரான (Street Artist) Banksy என்பவர் தனது பிந்திய கலைப்படைப்பான 'Civilian Drone Strike' என்பதை விற்றதின் மூலம் கிடைத்த 277,503 டொலர்களை ஆயுத – எதிர்ப்பு மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்!

## சனத்தொகையில் பாதிப்பேரின் நிலை

ஐ.நா. வெளியிட்டுள்ள ஒரு புதிய தகவலின்படி உலக சனத்தொகையில் 52 சதவிகிதம் பேருக்கு இணையத்தள வசதிகள் இல்லை. இதில் 62 சதவிகிதமானோர் ஆசியாவிலும், பசுபிக் தீவுகளிலும் வாழ்பவர்கள் ஆவர்.

## எகிப்தின் நாகரிக வேர்கள்

உலக நாகரிகத்தின் தொட்டிலாகக் கருதப்படுவது எகிப்திய நாகரிகம். அதில் ஒன்று முதன்முதலாகக் காகிதம் மற்றும் பேனா தயாரித்தமையாகும். எகிப்தியர்கள் முதன்முதலாகக் காகிதம் தயாரிப்பதற்கு எகிப்தின் பிரசித்தி பெற்ற நதியான நைல் நதியின் கரையோரங்களில் வளரும் 'பாபிரஸ்' என்ற மரத்தின் பட்டையையே பயன்படுத்தியதாகத் தெரிய வருகிறது. அதேநேரத்தில் மூங்கில் போன்ற அந்த மரத்தின் கூர்மையான பகுதியையே எழுது கருவியாகவும் பயன்படுத்தி இருக்கின்றனர். அதாவது எழுதும் கடதாசியும், எழுதும் கருவியும் ஒரே மரத்தில் இருந்தே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

## மௌனம் வன்மையானது!

'மௌனம் சில வேளைகளில் சப்தத்தை விட வன்மையானது'
- இந்த வாசகங்கள் சிக்காக்கோவில் உள்ள மேதினத் தியாகிகளின் நினைவுத்தூபியில் பொறிக்கப்பட்டுள்ளன.

## கிரேக்கம் தந்த கொடைகள்!

கிரேக்க நாடே (எதென்ஸ்) உலகிற்கு அதிகமான அறிஞர்களையும் மேதைகளையும் வாரி வழங்கியுள்ளது. அவர்களில் சோக்கிரடிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ மேதைகளை மட்டுமின்றி, மருத்துவத்தின் தந்தயாகக் கருதப்படும் ஹிப்போகிரேட்டீஸ் அவர்களைத் தந்ததும் கிரேக்கமே. இந்த ஹிப்போக்கிரெட்டீஸ் தான் கி.மு. 500களில் 'நோய்கள் கடவுளின் சாபம்' என்ற மூட நம்பிக்கையை மறுத்து, நோய்கள் உடலில் ஏற்படும் கோளாறுகள் என்றும், அவற்றை மருத்துவத்தால் மாற்றலாம் என்றும், உலகிற்கு முதன்முதலில் எடுத்தியம்பியவர்.

இந்த உலகம் முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெறும் மாணவர்கள் அவரது பெயரில் 'ஹிப்போகிரேட்டீஸ் சத்தியப் பிரமாணம்' எடுத்துக் கொண்டுதான் தமது பணியை தொடங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரான்சில் தொடரும் பாரம்பரியம்!

பிரான்சின் புதிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 577 உறுப்பினர்களில் 223 பேர் பெண்களாவர். உலக வரலாற்றில் முதலில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியையும், பின்னர் 'பரீஸ் கம்யூன்' என்ற பெயரில் சோசலிசப் புரட்சியையும் உலகிற்கு அறிமுகம் செய்த பிரான்ஸ், அந்தப் பாரம்பரியத்தைத் தொடர்வதையே இந்த பெண் பிரதிநிதித்துவ அதிகரிப்பு பிரதிபலிக்கிறது என எடுத்துக் கொள்ளலாமா?

# இயற்கையான முறையில் பித்தப்பை கற்களை நீக்க முடியுமா?

பித்தப்பை என்பது நமது உடலில் கல்லீரலில் ஒரு பகுதியுடன் பேரிக்காய் வடிவில் சுமாராக 8 செ.மீ. நீளமும் 4 செ.மீ. அகலமும் கொண்ட ஓர் உறுப்பு. நாம் சாப்பிடும் உணவை ஜீரணம் செய்ய உதவும் பித்த நீரை சேமித்து வைக்கும் உறுப்பு பித்தப்பை.

ஒரு வேளை சாப்பிட்டு, அடுத்த வேளை உணவு உண்பதற்கு இடைப்பட்ட நேரத்தில் இந்த பித்தப்பை ஜீரணத்திற்குத் தேவையான ஜீரண நீரை சேமித்து வைக்கும். நாம் உணவு உண்டதும், இந்த பித்தப்பை சுருங்குகிறது. இதனால் பையில் இருக்கும் ஜீரண நீர் இரைப்பைக்குச் சென்று உணவு செரிமானத்திற்கு பெரிதும் உதவுகிறது. இப்படி பித்தப்பை சுருங்கி விரியமால் போனால் பித்தப் பையில் உண்டாகும் ஜீரண நீர் கற்களாக மாறும் வாய்ப்புள்ளது.

ஒருவருடைய பித்தப்பையில் கற்கள் உண்டானால் பசிக்காதபோது சிறிது சாப்பிட்டாலே அவர்கள் வயிறு வீங்கி விடும். மேலும் சாப்பிட்ட உணவு செரிமானமாகாமல் நெஞ்செரிச்சல், புளியேப்பம் போன்ற பல பிரச்சினைகள் தோன்றும். பொதுவாக நம்தவறான வாழ்க்கை முறையினால் எந்த வயதினருக்கும் பித்தப்பையில் கற்கள் உண்டாகலாம். ஆனால் பெண்கள் தான் அதிகம் பாதிப்படைகிறார்கள். புற்றுநோய்க்கு அடிகோலும் பித்தப்பை கற்களை, நாமே இயற்கை வழியில் அகற்றலாம். மேலும் இந்த வழிமுறை, வலுவிழந்த நமது கல்லீரலை, புத்துணர்வு பெறவும் உதவுகிறது.

ஐந்து நாட்களுக்கு, தொடர்ந்து 4 கிளாஸ் அப்பிள் ஜூசையோ அல்லது தினமும் 4 அல்லது 5 அப்பிள்களை உண்டுவரவும். பித்தப்பையில் உள்ள கற்களை மிருதுவாக்க, அப்பிள் ஜூஸ் உதவும்.

ஆறாம் நாளில், மாலை 6 மணி மற்றும் இரவு 8 மணிக்கு சுடுநீரில் எப்சம் உப்பை (மெக்னீசியம் சல்பேட்) கலந்து குடிக்கவும். எப்சம் உப்பு, பித்தப்பை குழாய் திறப்பை எளிதாக்கும்.

இரவு 10 மணிக்கு, அரை கோப்பை ஒலிவ் எண்ணெய் அல்லது எள்ளு எண்ணெயை, அதே சம அளவுள்ள எலுமிச்சை சாறுடன் நன்கு கலக்கி குடிக்கவும். இது பித்தப்பை குழாய் வழியே, கற்கள் வெளியேற வழிவகுக்கும்.

அன்றைய தினத்தில், இரவு நேர உணவை தவிர்க்க வேண்டும். மறுநாள் காலை, இயற்கை உபாதையில், பச்சை நிற பித்தப்பை கற்கள் வெளியேறி இருப்பதை காணலாம்.

# நமது சூரிய குடும்பம்

நமது சூரியக் குடும்பத்தில் மொத்தமாக எட்டுக் கோள்கள் உள்ளன. அவையாவன:
புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரெனஸ், நெப்டியூன். சூரியனிலிருந்து இவற்றின் தூரங்களும் அவற்றின் விட்டங்களும் பின்வருமாறு:

புதன்: 58 மில்லியன் கிலோ மீட்டர் தூரம், 4,878 கிலோ மீட்டர் விட்டம்.

வெள்ளி: 108 மில்லியன் கிலோமீட்டர் தூரம், 12,104 கிலோமீட்டர் விட்டம்.

பூமி: 150 மில்லியன் கிலோ மீட்டர் தூரம், 12,756 கிலோமீட்டர் விட்டம்.

செவ்வாய்: 228 மில்லியன் கிலோமீட்டர் தூரம், 6,796 கிலோமீட்டர் விட்டம்.

வியாழன்: 778 மில்லியன் கிலோமீட்டர் தூரம், 142,984 கிலோமீட்டர் விட்டம்.

யுரெனஸ்: 2,870 மில்லியன் கிலோமீட்டர் தூரம், 51,118 கிலோமீட்டர் விட்டம்.

நெப்டியூன்: 4,497 மில்லியன் கிலோமீட்டர் தூரம், 49,532 கிலோமீட்டர் விட்டம்

# இரத்தத்தின் வகைகள்

இரத்தத்தில் நான்கு வகைகள் உள்ளன. 'A', 'B', 'AB', 'O' (K) என நான்கு வகைகள் உள்ளன.

இது நான்கைத் தவிர 'A1', 'A2' என்ற உபவகைகளும் இரத்தத்தில் உண்டு. 'O' பிரிவு இரத்தம் அனைவருக்கும் சேரும் என்பதால்தான், 'O' வகை இரத்தம் உள்ளவர்களுக்கு "யுனிவர்சல்டோனர்' (Universal Donor) என்று பெயர்.

இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களில் ஆன்டிஜன் (Antigen) எனும் ஒரு வகைப் புரதம் (Protein) உள்ளது. அதன் தன்மைக்கு ஏற்ப வகை பிரிக்கப்படுகிறது. இரத்த சிவப்பணுக்களில் 'A' ஆன்டிஜன் இருந்தால், 'A' வகை ஆகும் 'B' ஆன்டிஜன் இருந்தால், 'B' வகை ஆகும். 'AB' என்ற இரண்டு ஆன்டிஜன் இருந்தால் 'AB' வகை ஆகும். எந்தவிதமான ஆன்டிஜனும் இல்லையென்றால் 'O' வகை ஆகும்.

# அமெரிக்கர்களின் வருட வருமானம்!

ஒரு அமெரிக்க குடிமகனின் வருடாந்த சராசரி வருமானம் 53,245 டொலர்கள் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா உலகிலேயே முதல்தரமான செல்வந்த நாடு என்று சொல்லப்பட்டாலும், இந்த வருமானம் அமெரிக்கர்களின் வாழ்க்கை முறைக்குப் போதுமானதல்ல என்ற கருத்தும் பரவலாக உள்ளது.

# கறுப்புப் பணம் என்றால் என்ன ?

## மோடி அரசின் கறுப்புப் பணத்திற்கு எதிரான நடவடிக்கை!

**2016** ஆம் ஆண்டு நவம்பர் 8 இரவு 8 மணிக்கு தேசிய தொலைக்காட்சிகளில் தோன்றிய நரேந்திர மோடி அந்நாளின் நள்ளிரவிலிருந்து, அதாவது வெறும் நான்கு மணி நேரத்தில், 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் சட்டரீதியான தகுதியை இழக்கும் என்று அறிவித்தார். இந்த வினோதமான முடிவு 'கறுப்புப் பணத்தை'' தாக்கும் என்று நியாயப்படுத்தினார். அது மட்டுமின்றி ''பயங்கரவாதிகள்'' பயன்படுத்தும் போலி ரூபாய் நோட்டுகள் செல்லுபடியாகாமல் போய்விடுமென்றும் கூறினார். அரசாங்கத்தை உற்சாகமாக ஆதரித்துவரும் சில தரப்பினர் மோடியின் இந்த முடிவு ''பயங்கரவாதத்தின் மீது தொடுக்கப்பட்ட துல்லியத் தாக்குதல்'' என்பது வரை பேசிவிட்டனர்.

கள்ள நோட்டுகள் பற்றி பிறகு பேசுகிறேன். முதலில் குடியரசுத் தலைவர் பிராணாப் முகர்ஜியே வழக்கத்திற்கு மாறாகப் பாராட்டியிருக்கும் ''கறுப்புப் பண'' விவகாரத்தை முதலில் பார்க்காலாம். ஆயிரம், ஐநூறு ரூபாய்த் தாள்களை மதிப்பிழக்கச் செய்த மத்திய அரசின் நடவடிக்கை 'கறுப்புப் பணத்தின்' மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என்கிற வாதம், 'கறுப்புப் பணத்தின்' தன்மை குறித்து கொஞ்சம்கூடப் புரிதல் இல்லாமல் முன்வைக்கப்படும் ஒன்று. நிதானமில்லாமல் எளிமைப்படுத்தப்படும் கருத்தும் கூட.

''கறுப்புப் பணம்'' என்பது டிரங்குப் பெட்டிகளிலும், தலையணை உறைகளுக்குள்ளும் கற்றை கற்றையாக ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் என்கிற உள்ளார்ந்த புரிதலிலிருந்து வரும் கருத்து அது. 500, 1000 ரூபாய் நோட்டுகளை மதிப்பிழக்கச் செய்தால் அதிக எண்ணிக்கையிலான பழைய நோட்டுகளை வைத்திருப்பவர்கள் அவற்றை ஒப்படைத்துவிட்டு, புதிய நோட்டுகளைப் பெறும் பரிவர்த்தனைக்காக வங்கிகளுக்கு செல்வார்களாம் அவர்கள் மீது வங்கிகளுக்கு சந்தேகம் ஏற்பபட்ட உடன் வரி நிர்வாக அதிகாரிகளுக்கு வங்கிகள் புகார் தெரிவிக்குமாம் உடனே அவர்கள் குற்றவாளிகளைப் பிடித்து விடுவார்களென்றெல்லாம் இந்த அனுமானங்கள் இப்படியான புரிதலிருந்து வருகின்றன. இப்படி 'கறுப்புப் பணம்' வெளிச்சத்திற்கு வரும்போது, எதிர்காலத்தில் தவறுகள் நடக்காது என்று சொல்கிறது அந்த அனுமானம்.



பேராசிரியர் பிரபாத் பட்நாயக்

'கறுப்புப் பணம்' உண்மையிலேயே நோட்டுகளாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்று வைத்துக் கொண்டாலும், இந்த வாதத்தின் இரண்டாவது பகுதி அர்த்தமற்றதுதான். ஒருவர் கணக்கில் வராத 20 கோடிகளை 500, 1000 ரூபாய் நோட்டுகளாக வைத்திருக்கிறார் என்றால், அவர் புதிய நோட்டுகளைப் பெறுவதற்காக 20 கோடியையும் எடுத்துக்கொண்டு வங்கிக்குச் செல்லமாட்டார். (எப்படியிருந்தாலும் அவர் அப்படிச் செய்ய அனுமதிக்கப்படவும் மாட்டார்). அதற்கு பதிலாக, அவர் பல அடிமைகளிடம் சிறு தொகைகளைக் கொடுத்து வங்கிகளுக்கு அனுப்பி வைப்பார். இறுதிக் கெடு தேதியான டிசம்பர் 30-க்குப் முன் இப்படி பல நாட்கள் செய்வார்.

உண்மையில் பார்த்தால் இந்த தொடர் முயற்சி கூட அவருக்குத் தேவைப்படாது. பழைய நோட்டுகளுக்குப் பதில் கமிஷனை எடுத்துக் கொண்டு புது நோட்டுகள் தருவதாகக் கூறி பல தரகர்கள் விரைவில் வருவார்கள். இப்படி ''கறுப்புச் செயல்பாட்டாளர்கள்'' பழைய ''கறுப்புப் பண'' நோட்டுகளை பரிவர்த்தனை செய்து புதிய நோட்டுகளைப் பெறும்போது, 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகளை மதிப்பிழக்கச் செய்வதால் பதுக்கப்பட்டிருக்கும் பணக்குவியல் வெளிவந்து விடும் என்று 'நிபுணர்கள்' பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் முன்வைக்கும் வாதம் பொருளற்றது.

அதை விட முக்கியமானது, 'கறுப்புப் பணம்' என்ற இந்த கருத்தாக்கமே அபத்தமானது. 'கறுப்புப் பணம்' என்று சொல்லும்போதே நம் மனக்கண்ணில் தோன்றும் பிம்பம் வெளிப்படையாக வங்கித் வைப்புத் தொகையாக இருக்கும் பணமல்ல, தலையணை உறைகளுக்குள்ளோ அல்லது மண்ணுக்கு அடியில் புதைக்கப்பட்ட பெட்டிகளுக்குள்ளோ பதுக்கப்பட்டிருக்கும் கற்றை கற்றையான நோட்டுகள்தான் நினைவுக்கு வரும். உண்மையில் பார்த்தால், 'கறுப்புப் பணம்' என்று நாம் சொல்லும்போது, கள்ளக்கடத்தல், போதைமருந்து விற்பனை, பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆயுதம் சப்ளை செய்வது போன்ற முழுமையான சட்டவிரோதச் செயல்களையோ அல்லது சட்டப்படி அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையோ, அல்லது வரி செலுத்துவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அறிவிக்கப்படாமல் நடக்கும் செயல்பாடுகளையோதான் குறிக்கிறோம்.

சான்றாக, நூறு தொன் உலோகங்களை தோண்டி எடுத்துவிட்டு, வரியைக் குறைப்பதற்காக 80 தொன்களைக் கணக்கில் காட்டுவதை நாம் 'கறுப்புப் பண' உற்பத்தியாகக் கொள்கிறோம். அதே போல், 100 டொலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்துவிட்டு, 80 டொலர் மதிப்புள்ள பொருட்களையே ஏற்றுமதி செய்வதாகக் கணக்கில் காட்டுவதும், மீதமுள்ள 20 டாலர்களை சட்டவிரோதமாக ஸ்விட்சர்லாந்து நாட்டு வங்கியில் போட்டு வைப்பதும் 'கறுப்புப் பண' உற்பத்திக்கு மற்றொரு சான்றாகும். அல்லது, ரூபாயை ஹவாலா முறையில் அன்னிய

# DEMONETIZATION AND DEMOCRACY



கரன்சியாக மாற்றி அயல் நாட்டு வங்கிகளில் பதுக்குவதும் 'கறுப்புப் பண' உற்பத்திதான். சுருக்கமாகச் சொன்னால், 'கறுப்புப் பணம்' என்பது பலவகையான அறிவிக்கப்படாத நடவடிக்கைகளையே குறிக்கும்.

'கறுப்புப் பணம்' என்பது ஒரு இருப்பைக் குறிப்பதல்ல, ஓட்டத்தைக் குறிப்பது என்பதுதான் இதன் பொருள். 'கறுப்புச் செயல்பாடுகள்' அவற்றில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இலாபத்தைத் தருபவை பணத்தைக் குவித்து வைத்திருப்பது இலாபம் தராது. வர்த்தகச் செயல்பாடுகள் என்பதற்கு மார்க்ஸ் சொல்லியிருப்பது "கறுப்புச் செயல்பாடுகளுக்கும்' பொருந்தும் அதாவது, பணத்தை சுற்றில் விடுவதால்தான் இலாபம் ஈட்ட முடியுமேயொழிய, பதுக்கி வைப்பதினால் அல்ல. 'கஞ்சன்' முன்னதைச் செய்வான், முதலாளி பின்னதைச் செய்வான். வர்த்தகப் பணம் குறைந்த அல்லது நீண்டகாலத்திற்கு இருப்பாக வைக்கப்படும் என்பது உண்மைதான் (உதாரணமாக, மூலதனம்–பண்டம்–மூலதனம் என்கிற சுழற்சியில்) ஆனால் இது 'வெள்ளை நடவடிக்கைகளுக்குப்' (வர்த்தகம்) பொருந்தும் அளவிற்கு 'கறுப்பு நடவடிக்கைகளுக்கும்' பொருந்தும்.

அதனால்தான், 'கறுப்புப் பணம்' இருப்பாக வைக்கப்படும் என்றும், 'வெள்ளைப் பணம்' சுற்றில் விடப்படும் என்றும் அவற்றின் தனித்தன்மையை வரையறுப்பதற்கு ஆதாரமே இல்லை.

எல்லாப் பணமும் சில இடைவெளிகளுக்குப் பிறகு சுற்றி வருகிறது 'கறுப்புச் செயல்பாடாக' இருந்தாலும் 'வெள்ளைச் செயல்பாடாக' இருந்தாலும் இதுதான் உண்மை. ஆகவேதான், 'கறுப்புப் பணத்தை'' வெளியே கொண்டுவருவதன் சாரம் "கறுப்பு நடவடிக்கைகளைத்'' தேடிக் கண்டுபிடிப்பதில் இருக்கின்றதேயொழிய, இருப்பாக வைத்திருக்கும் பணத்தைத் தாக்குவதில் அல்ல. இதற்கு, நேர்மையான, முறையான, சிரமம் மிகுந்த புலனாய்வு தேவைப்படுகிறது.

கணனிகளின் காலத்திற்கு முன்பேயே, முனைப்புக் கூடிய புலனாய்வின் வாயிலாக எந்தவொரு வரி ஏய்ப்பாளரையும் பிடித்துவிடுவார்கள் என்ற பெருமை பிரிட்டிஷ் அரசின் உள்நாட்டு வருவாய்ச் சேவை அமைப்புக்கு இருந்தது. இந்தியாவை விட சிறியநாடு பிரிட்டன் என்பது உண்மைதான். ஆனால் இந்தியா போன்ற ஒரு நாட்டிற்கு, அதன் அளவிற்கும் தேவைக்கும் ஏற்றதுபோல் அதிகமான அலுவலர்களைக் கொண்ட அமைப்பை உருவாக்கலாம். இதை நாம் செய்துவிட்டால், பொறுமையும், திறமையும் நிறைந்த வரி நிர்வாக அமைப்பை ஏற்படுத்திவிட்டாலே உள்நாட்டிலிருக்கும் 'கறுப்புப் பணத்தையாவது' வெளிக் கொண்டுவர முடியும்.

ஆனால், ஒரு கணிசமான அளவு 'கறுப்புச் செயல்பாடுகள்'' அயல்நாட்டிலிருக்கும் வங்கிகள் மூலமாகத்தான் நடைபெறுகின்றன. உள்நாட்டில் இருப்பதை விட இந்தச் செயல்பாடுகளின் அளவு மிக அதிகம் என்று சிலர் கூறுவார்கள். தேர்தலுக்கு முன் நரேந்திர மோடியும் 'கறுப்புப் பணத்தை' வெளிநாட்டிலிருந்து 'திரும்பக் கொண்டு வருவதைப்'' பற்றிதான் பேசினார். பெரும்பாலான 'கறுப்புப் பணம்' வெளிநாட்டில் இருக்கிறது என்பதை சூசகமாக உணர்த்தினாலும், அவரும் 'கறுப்புப் பணம்' என்பது ஒரு பதுக்கிவைக்கப்பட்ட குவியல், அது ஒரு செயல்பாடு என்ற அப்பாவித்தனமான புரிதலில்தான் இருந்தார். 'கறுப்பு நடவடிக்கைகளுக்கு' பெரும் மூலாதாரமாக அன்னிய வங்கிகள் இருக்கும்போது, 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகளை மதிப்பிழக்கச் செய்வது சாமானிய மக்களுக்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்துமேயன்றி, அத்தகைய கருப்பு நடவடிக்கைகளை ஒழிக்க உதவாது.

ரூபாய் நோட்டுகளைச் மதிப்பிழக்கச் செய்வது இந்தியாவில் இது முதல் முறையல்ல. ஜனவரி 1946–இல், 1000 மற்றும் 10000 ரூபாய் நோட்டுகள் செல்லாதவை என்று அறிவிக்கப்பட்டன. 1978–இல் மொரார்ஜி தேசாய் அரசாங்கம் 1,000, 5,000, 10,000 ரூபாய் நோட்டுகள் ஜனவரி 16 நள்ளிரவிலிருந்து செல்லாது என்று அறிவித்தது. 1978–லும் (1946லும் கூட) இது பொதுமக்களை பாதிக்கவில்லை. ஏனெனில், அவர்களில் மிகப்பெரும்பாலானோர் அந்த நோட்டுகளைப் வைத்திருக்கவில்லை. ஏன், பார்த்ததுகூட இல்லை. (1978இல் கூட 1000 ரூபாய் என்பது பெரும் தொகை சாமானியர்கள் ஆயிரம் ரூபாய் நோட்டுகளைப் பார்த்தது இல்லை).

மொரார்ஜி அரசின் நடவடிக்கை பொதுமக்களை பாதிக்கவில்லை, 'கறுப்புப் பணம்' என்கிற தீமையையும் ஒழிக்கவில்லை. மோடி அரசின் நடவடிக்கையும் அதேபோல் பயனற்றதாகப் போகும் அதே நேரத்தில் பொதுமக்களின் வாழ்க்கையையும் கடுமையாகப் பாதிக்கும் என்கிற பக்க விளைவும் இருக்கும்.

500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகளை மதிப்பிழக்கச் செய்வது 'கறுப்புப் பணத்தை' கட்டுபடுத்துகிறதோ இல்லையோ, இந்த நடவடிக்கை பணத்தை

ரொக்கமாகப் பயன்படுத்தும் பொருளாதார அமைப்பிலிருந்து மாறிச்செல்லும் நீண்டகால விளைவினை ஏற்படுத்தி, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் நிதி உதவி பெறாத, கணக்கில் வராத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் என்று சிலர் வாதிடுகிறார்கள். அன்னிய வங்கிகளின் நிதியுதவியுடன்

நடைபெறும் 'கறுப்பு நடவடிக்கைகள்' இந்த ரொக்கமில்லாத இந்தியாவின் பார்வையிலிருந்து தப்பித்து விடும் என்பது ஒரு புறமிருக்க, ரொக்கமில்லாத இந்தியா என்பதே, ஒரு கிரெடிட் கார்டு வாங்குவதற்கும், வங்கிக் கணக்குத் தொடங்குவதற்கும் ஒரு சாமானியன் படும்பாட்டினை அறியாத மேல்தட்டு வர்க்கத்தின் பகல் கனவுதான்.

'எல்லைக்கு அப்பால்' அச்சிடப்படும் போலி நோட்டுகளின் சுழற்சியைத் தடுப்பதன் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுக்க முடியுமென்றும் ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. புதிய நோட்டுகளை அச்சடிக்கப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் கள்ள நோட்டு உற்பத்தியைத் தடுக்கும் என்கிற அனுமானத்திலிருந்துதான் இந்த வாதம் எழுகிறது. அப்படியே இருந்தால் கூட போலிகளை உருவாக்க முடியாத வகையிலான புதிய நோட்டுகளை அறிமுகப்படுத்தும் இந்தப் பணியை படிப்படியாக, யாருக்கும் இடையூறு இல்லாத வகையில் செய்திருக்கலாம். இப்படித்தான், பழைய நோட்டுகளை மாற்றி புதியவற்றை அறிமுகப்படுத்தும் பணி இதுவரை நடந்து வந்திருக்கிறது. நவம்பர் 8 இரவிலேயே பனிச்சரிவு போல் கள்ள நோட்டுகள் வந்து குவியும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கக் கூடிய நிலை இல்லையே? மக்களின் பாதுகாப்பு உணர்வின் மீதும், சௌகரியங்கள் மீதும் அதிரடியான ஆச்சரியமூட்டக்கூடிய பெரும் தாக்குதலை ஏன் அரசாங்கம் அந்த இரவில் தவிர்க்கவில்லை.?

மோடி அரசின் இந்த நடவடிக்கை, நவீன இந்தியாவின் வரலாற்றில் முன்னெப்போதும் நடந்ததில்லை. பெரும்பணக்காரர்கள் வைத்திருக்கும் நோட்டுகளை மட்டும் மதிப்பிழக்கச் செய்து, பிறரின் நோட்டுகளுக்கு விலக்கு அளித்த பிரிட்டிஷ் அரசாங்கம் கூட, மோடி அரசை விட மக்களின் உணர்வுகளுக்கு அதிகம் மதிப்பளித்திருக்கிறது. இந்த அவசர நடவடிக்கை, அறிவிக்கப்படாத எமர்ஜென்சியை அமுல்படுத்தும் வகையில் மோடி எடுத்துவரும் ஏராளமான பிற நடவடிக்கைகளைப் போன்றதுதான். இதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இது மக்களுக்கு எதிரானது.

**(பேராசிரியர் பிரபாத் பட்நாயக் (Prabhat patnaik) இவர் டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் மற்றும் பல்வேறு பொருளாதார கட்டுரைகள், நூல்கள் எழுதியுள்ளார். 'THE CITIZEN' என்ற இணைய இதழுக்கு அவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.**

**இக்கட்டுரையினை தமிழாக்கம் செய்தவர் 'Frontline' ஆசிரியரான விஜயசங்கர் ராமச்சந்திரன். இதனை அவரது முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். அவருக்கு எமது நன்றிகள் - வானவில்)**

# தமிழக மீனவர்கள் பிடிக்கும் மீன் வகைகளில் அரைவாசி இலங்கைக் கடற்பரப்பிலேயே பிடிக்கப்படுகின்றன!

தமிழக மீனவர்களால் பிடிக்கப்படும் மீன் வகைகளில் 50 சதவீதமானவை இலங்கைக் கடற்பரப்பிலேயே பிடிக்கப்படுவதாக இலங்கைக் கடற்படையின் ஓய்வுபெற்ற தளபதியான அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே (Jayanath Colombage) குறிப்பிட்டிருக்கிறார்.

லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தால் (Lakshman Kadirgamar Institute) கொழும்பில் நடாத்தப்பட்ட 'இந்து சமுத்திரத்தில் வளர்ந்து வரும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து ஒண்டு பேசுகையிலேயே முன்னாள் கடற்படைத் தளபதி இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், தமிழ்நாட்டில் 600 வரையிலான மீன் பதனிடும் நிலையங்கள் இருக்கின்றன. இந்த நிலையங்களில் கூடுதலாக இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிடிக்கப்படும் இறால் பதப்படுத்தப்பட்டு, அவை மேற்கு நாடுகளுக்கு நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் இந்த மீன்பிடிப் படகுளை வைத்திருப்பவர்களுக்கு தமிழகத்தின் அதிகாரம் மிக்க அரசியல்வாதிகளுடன் நெருக்கமான தொடர்புகள் உண்டு.

டில்லியில் இருக்கும் மத்திய அரசாங்கம் இலங்கையின் பிரச்சினையை ஓரளவு புரிந்து கொண்டுள்ளது. அவர்களது ஒரேயொரு வேண்டுகோள் அத்துமீறி மீன் பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் மீது மென்மையான அணுகுமுறையை இலங்கை கடைப்பிடிக்க வேணடும் என்பதே.

தமிழக மீனவர்கள் 'பொட்டம்' (Bottom Trawling) என்ற முறையைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதே மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாகும். அந்த வகையில் மீன் பிடிக்கும் போது, கடலில் உள்ள சகலவிதமான மீன் வளங்களுமே அழிந்து போகின்றன என அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட பங்களாதேசின் டாக்கா பல்கலைக்கழகத்தின் சர்வதேச தொடர்புகள் பிரிவைச்சேர்ந்த பேராசிரியை Lailufar Yasmin பேசுகையில், இலங்கை எதிர்நோக்குவது போன்ற பிச்சனையையே பங்களாதேஸ் இந்தியாவிடமிருந்தும், மியன்மாரிடமிருந்தும் எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழக தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் சிரேஸ்ட ஆராய்ச்சியாளர் டொக்டர் David Brewster அவர்களும் கலந்து கொண்டார்.

---

வர்க்கப்போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்சியவாதிகள் ஆகிவிடமாட்டார்கள். வர்க்கப் போராட்டத்தை ஏற்பதை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பது வரை விரித்துச் செல்பவனே மார்க்சியவாதியாவான். மார்க்சியவாதிக்கும் சாதாரண சிறு (அதேபோல் பெரு) முதலாளிக்கும் இடையே உள்ள மிகவும் ஆழமான வேறுபாடாக இதுவே அமைகிறது. மார்க்சியம் பற்றிய உண்மையான புரிதலையும் அதை ஏற்றுக் கொள்வதையும் சோதித்து அறிவதற்கான உரைகல்லும் இதுதான்.

**–லெனின்**

# கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளிவந்து 160 (குறிப்பு: இக்கட்டுரை 2008 ஆம் ஆண்டு எழுதப்பட்டது) ஆண்டுகள் கழிந்துவிட்டன. என்றாலும் மீண்டும் மீண்டும் விவாதிக்கப்படுகிறது; கொண்டாடப்படுகிறது; எதிர்க்கப்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை முதலில் வெளிவந்தது 1848ம் ஆண்டில். ஜெர்மன் மொழியில் எழுதப்பட்ட இந்த அறிக்கை பெர்லினில் வெளியிடப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அதற்கு பிறகு பல்வேறு மொழிகளில் பல்வேறு பதிப்புகள் வந்துவிட்டன. தேவை இன்னமும் குறைந்தபாடில்லை.

1883ல் வெளிவந்த ஜெர்மானிய பதிப்பின் அட்டையில் கார்ல் மார்க்ஸ், ஃபிரெட்ரிக் எங்கெல்ஸ் இருவருடைய பெயரும் இருந்தன. அதன் முன்னுரையில் எங்கெல்ஸ் தெளிவுபடுத்தினர். உண்மையில் இது மார்க்சின் தனிப்பட்ட படைப்பு. அறிக்கையின் அடிப்படை சாரம் முழுக்க முழுக்க மார்க்சையே சாரும். தவிரவும், இலண்டனில் கம்யூனிசத்தை அப்போதைய உலகம் எப்படிப் பார்த்தது என்பதை அறிக்கையே வெளிப்படுத்துகிறது. கம்யூனிசம் என்னும் பூதம் ஐரோப்பா முழுவதையும் சுற்றிவருவதாக பீதி கிளம்பியிருக்கிறது. காவல் துறையினர், உளவாளிகள், அரசாங்கங்கள், மன்னர்கள் என்று அனைவரும் கம்யூனிசத்தைக் காட்டி மக்களை பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? கம்யூனிசம் என்பது ஒரு சக்தி என்பதை ஐரோப்பிய நாடுகள் ஒப்புக்கொள்கின்றன.

இந்த நேரத்தில் நாம் செய்யவேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது. கம்யூனிசம் என்றால் என்ன? கம்யூனிஸ்ட்களின் இலட்சியம் என்ன? நோக்கம் என்ன? நம் பார்வை எப்படிப்பட்டது? அனைத்தையும் நாம் பட்டவர்த்தனமாக அறிவித்தாக வேண்டும். நம் நிலையை நாம் தெளிவுப்படுத்தியாகவேண்டும். ஆகவே, இந்தப் பிரகடனம்.

வசீகரிக்கும் சில முக்கிய இலட்சியங்களை அறிக்கை அடுக்கியது. குழந்தைகள் அனைவருக்கும் இலவச கல்வி. குழந்தைத் தொழிலாளர்கள் என்று ஒருவரும் இருக்கமாட்டார்கள். நகரத்துக்கும் கிராமத்துக்குமான இடைவெளி குறைக்கப்படும். பிறகு, அழிக்கப்படும். நகரம், கிராமம் என்று பேதமில்லாமல் மக்கள் பரவலாக வசிப்பார்கள். தரிசாகக் கிடக்கும் நிலங்கள் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும். தகவல், போக்குவரத்து ஆகியவற்றை அரசாங்கம் நிர்வகிக்கும். வங்கிகள் தேசியமயமாக்கப்படும். தனிச்சொத்துரிமை கிடையாது.

## மருதன்

கம்யூனிஸ்ட்டுகள் என்ன செய்யவேண்டும்? மக்களிடையே உண்மையை பரப்பவேண்டும். பணக்காரர்களும் ஏழைகளும் எப்படித் தோன்றுகிறார்கள் என்பதை புரியவைக்கவேண்டும். ஒரு வர்க்கமாக தொழிலாளர்கள் ஒன்றிணையவேண்டிய அவசியத்தை உணர்த்தவேண்டும். தற்போதைய அரசியல் அமைப்பை எதிர்த்து போராடுபவர்களுக்கு கம்யூனிஸ்டுகள் உதவி செய்யவேண்டும்.

கம்யூனிசப் புரட்சி ஆளும் வர்க்கத்தை நடுநடுங்கச் செய்யவேண்டும். தொழிலாளர்கள் இழப்பதற்கு இனி ஒன்றும் இல்லை. தங்களைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளைத் தவிர. பெறுவதற்கோ ஒரு பொன்னுலகம் இருக்கிறது. உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!

இலாபம், மேலும் இலாபம் என்று பணத்தைத் துரத்திக்கொண்டிருந்த முதலாளிகளை இந்த அறிக்கை இம்சித்தது. தொழிலாளர்கள் இந்த அறிக்கையை வாசித்து புதிய தெம்பையும் நம்பிக்கையையும் பெற்றார்கள். இங்கிலாந்து, ஜெர்மனி, ரஷ்யா என்று ஐரோப்பா முழுவதிலும் உள்ள பல்லாயிரக் கணக்கானவர்கள் புதிய வெளிச்சத்தைக் கண்டனர். இது நம் தலைவிதி, கடவுள் நமக்கு கொடுத்தது இவ்வளவுதான் என்று ஏழ்மையை வேறு வழியின்றி சகித்துக் கொண்டிருந்தவர்கள், துணிந்து கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள்.

எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை வீட்டுக்குப் போ என்று நினைத்த மாத்திரத்தில் கழுத்தைப் பிடித்து தள்ளும் நிலை மாறியது; ஏன் என்ன காரணம் என்று தொழிலாளி திருப்பிக் கேட்க ஆரம்பித்தார்; வேலை நேரங்கள் திருத்தி அமைக்கப்பட்டன; தொழிற்சங்கங்கள் உருவெடுத்தன; ஆண்களுக்குத் தனி பெண்களுக்குத் தனி என்றிருந்த ஊதிய முறை மாற்றி அமைக்கப்பட்டது.

1917 அக்டோபரில் லெனின் தலைமையில் நிகழ்த்தப்பட்ட ரஷ்யப் புரட்சி, கொடுங்கோல் ஜார் ஆட்சியை வீழ்த்தியது. புதிய சோவியத் யூனியன் மலர்ந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததையடுத்து, பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கம்யூனிஸ்ட் தேசங்களாக மாறின. 1949ல் சீனா கம்யூனிஸ்ட் நாடானது. 1959ல் கியூபா. மிகச் சமீபத்தில், நேபாளம். இந்த தேசங்களில் சில உயிர்ப்புடன் கம்யூனிசத்தைப் பாதுகாக்கின்றன. சில தவறவிட்டு விட்டன. ஆனால், கம்யூனிசம் உயிர்ப்புடன் இருக்கிறது.

பிபிசி சர்வே ஒன்றை நடத்தியது. உங்கள் பார்வையில் உலகத்தை மாற்றியமைத்த பெருமகனார் யார்? காந்தி, மண்டேலா, மார்ட்டின் லூதர் என்று பலரும் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். ஆனால், மக்கள் முன்வைத்த பெயர் கார்ல் மார்க்ஸ். வரலாறு, அரசியல், தத்துவம், பொருளாதாரம், இலக்கியம், கலை என்று மார்க்சியம் செழுமைப்படுத்தியுள்ள துறைகள் ஏராளம்.

உலகை இன்று அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பூதம், ஏகாதிபத்தியம். வால் மார்ட் சரிந்துகிடக்கிறது. விலைவாசி உச்சத்தில். லாபத்துக்காக தேசங்கள் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருக்கின்றன. உலகமயமாக்கல் என்னும் சிலந்தி வலைப்பின்னலில் பூச்சிகள் போல் ஏழைகள் சிக்கிக் கிடக்கிறார்கள். சிக்கலில் இருந்து விலகிக்கொள்ள மாத்திரமல்ல, சிலந்திகளைப் பற்றி விலாவரியாகத் தெரிந்துகொள்ளவும் இந்த அறிக்கை அவசியம்.

(இக்கட்டுரை 2008 ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 'கல்கி' இதழில் வெளிவந்தது)

**முன்பக்கத் தொடர்ச்சி...**

வரப்பட்ட போது அதை கடுமையாக எதிர்த்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும், பின்னர் சந்திரிக குமாரதுங்க தலைமையிலும், மகிந்த ராஜபக்ச தலைமையிலும் பதவிக்கு வந்தபோது, அந்த சர்வாதிகார அரசியல் அமைப்பை தாம் பதவிக்கு வந்தால் மாற்றுவதாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து அந்த அரசியல் அமைப்பை மாற்றாமல் தாமும் அதில் பதவிச் சுகம் கண்டதன் விளைவே இன்று மீண்டும் ஐ.தே.க. தலைமையிலான அரசு ஒரு புதிய மக்கள் விரோத அரசியல் அமைப்பை நடைமுறைப்படுத்த எடுத்து வரும் முயற்சிகள் ஆகும்.

முன்னைய அரசியல் அமைப்பைக் கொண்டு வந்தவர்களும் இவர்களே என்ற போதிலும், இன்றைய நிலைமைக்கு ஏற்றவாறு ஏகாதிபத்திய சக்திகளுக்குச் சேவகம் செய்யவும், மக்களை அடக்கி ஒடுக்கி அவர்கள் மீது சர்வாதிகாரத்தனமான ஆட்சியொன்றைத் திணிக்கவுமே புதிய அரசியல் அமைப்பு கொண்டு வரப்படுகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதைவிட இன்னொரு முக்கிய விடயமும் புதிய அரசியல் அமைப்புக் கொண்டு வருவதின் நோக்கத்தில் உள்ளடங்கி இருக்கிறது. அதாவது, புதிய அரசியல் அமைப்பின் மூலம் முன்னைய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு அடிகோலிய 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒழித்துக் கட்டுவதும் இன்றைய அரசின் தலையாய நோக்கமாகும். இதை ஆட்சியாளர்கள் வெளிப்படையாகச் சொல்லாவிடினும் அதுதான் அவர்களது நோக்கமாகும்.

ஆட்சியாளர்களின் நோக்கம் அதுவாக இருக்க, தமிழரசுக் கட்சித் தலைமையில் உள்ள மும்மூர்த்திகளான சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோர் புதிய அரசியல் அமைப்புக் கொண்டு வருவதின் நோக்கமே தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத்தான் என திரும்பத் திரும்ப பொய்யுரைத்து வருகின்றனர். ஆனால் அரச தலைவர்களான ஜனாதிபதி மைத்திரியோ, பிரதமர் ரணிலோ புதிய அரசியல் அமைப்பு கொண்டு வரப்படுவதின் நோக்கம் இனப் பிரச்சினைத் தீர்வுக்குத்தான் என இன்று வரை தவறுதலாகத்தன்னும் வாய் திறந்து ஒரு வார்த்தை கூறவில்லை.

ஆனால் ஒருகாலத்தில் லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்தபோது தன்னை நேர்மையான, இனப் பாரபட்சமற்ற இடதுசாரி எனப் பீற்றியவரும், பின்னர் 180 டிகிரி பல்டியடித்து வலதுசாரி ஐ.தே.கவில் சங்கமித்து அதன் மூலம் நாடாளுமன்றப் பதவி பெற்றவரும், தற்போதைய புதிய அரசியல் அமைப்பு முயற்சிகளின் மூலகர்த்தாவாகத் செயற்படுபவருமான ஜயம்பதி விக்கிரமரத்ன புதிய அரசியல் அமைப்புக் குறித்து கூறியதை அவதானித்தால், அது கொண்டு வரப்படுவதின் நோக்கம் என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அவர் பின்வருமாறு கூறுகிறார்:

''தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காத, பிரிவினைக்கு எதிரான ஏற்பாடுகள் புதிய உத்தேச அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரிவினைக்கு ஆதரவாக நடக்கவோ, அதற்கேற்றாற் போன்ற தீர்மானங்களை நிறைவேற்றவோ, புதிய அரசியல் யாப்பில் மாகாண சபைகளுக்கு அதிகாரமோ இடமோ இல்லை. ஆளுநர் மற்றும் பிரதமர் கையில் எப்போதும் அதிகாரத்தை வைத்திருக்கக்கூடிய வகையில் புதிய அரசியல் யாப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன''.

இதேநேரத்தில் ஜனாதிபதி மைத்திரியின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரும், தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தவரும் அமைச்சருமான டிலான் பெரேரா கூறுவதைப் பாருங்கள்:

''சம்பந்தன்தான் எமக்குக் கடைசி ஆயுதம். ஒற்றையாட்சியையும், பௌத்த மதத்தையும் ஏற்றுக்கொள்ள தமிழ்த் தரப்பில் அவரைத் தவிர இனி எமக்கு வேறு யாருமில்லை.''

இவர்கள் மட்டுமின்றி, தம்மை சோசலிஸ்ட்டுகள் என்று கூறி, சிவப்புக் கொடி ஏந்தித் திரியும் போலி இடதுசாரிகளான ஜே.வி.பி. கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் இந்தப் புதிய அரசியல் அமைப்புச் சம்பந்தமாக அதை எதிர்ப்பவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அவர் தனது வேண்டுகோளில் ''முன்னைய அரசியல் அமைப்பின் கீழ் உள்ள மாகாண சபை முறை பிரிவினைவாதத் தன்மையுடையது. ஆனால் வரப்போகும் புதிய அரசியல் அமைப்பில் பிரிவினை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருக்கையில் அதை ஏன் எதிர்க்கிறீர்கள்?'' என பொது எதிரணியினரைப் பார்த்துக் கேட்கிறார் ரில்வின் சில்வா.

இவர்கள் அனைவரதும் கூற்றிலிருந்து தெரிவது என்ன? தமிழ் மக்களுக்கு ஓரளவு நன்மை பயப்பதும், இந்திய அரசின் அனுசரணையுள்ளதுமான மாகாண சபை முறைமையை ஒழித்துக் கட்டி, தமிழ் மக்களின் கழுத்தை ஒற்றையாட்சி என்ற கயிற்றின் மூலம் இறுக்குவதே புதிய அரசியல் அமைப்பின் நோக்கம். நிலைமை இவ்வாறிருக்க சம்பந்தன் குழுவினர் புதிய அரசியல் அமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போகின்றது எனச் சொல்வது பொய்யல்லாமல் வேறென்ன? உண்மையில் வரலாற்றைச் சற்று ஆழ்ந்து பார்த்தால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகளுக்கு சிங்களத் தலைவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட போதெல்லாம் அதைக் குழப்பும் சக்திகளுக்குத் துணை போனவர்கள் தமிழ்த் தலைமைகள்தான் என்பது தெரிய வரும். உதாரணமாக,

1957இல் பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை உருவாகி தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கவிருந்த நேரத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐ.தே.க. குழப்பங்களை உருவாக்கி அதைக் கிழித்தெறிய வைத்தனர். அந்த நேரத்தில் பண்டாரநாயக்கவின் கைகளைப் பலப்படுத்தி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த உதவியிருக்க வேண்டிய தமிழரசுக் கட்சியினர், பண்டாரநாயக்க அரசில் இருந்த சில இனவாத வலதுசாரி அமைச்சர்கள் திட்டமிட்டு ஒப்பந்தத்தைக் குழப்புவதற்காக தமிழ் பகுதிகளுக்கு அனுப்பி வைத்த சிங்கள சிறீ பொறித்த வாகனங்களுக்கு எதிராக 'சிறீ எதிர்ப்புப் போராட்டம்' நடாத்தி, சிங்கள இனவாதிகளின் கைகளைப் பலப்படுத்தி

பண்டாரநாயக்கவை ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைக்கும் நிலைமைக்கு உள்ளாக்கினர்.

அடுத்ததாக, 1987இல் இந்திய - இலங்கை உடன்படிக்கை உருவாகி தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை முறை நடைமுறைக்கு வந்த போது புலிகளுடன் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அதை எதிர்த்ததுடன், இனவாதி பிரேமதாச மூலம் மாகாண சபையையும் கலைக்க வைத்தனர்.

பின்னர் சந்திரிக்க தலைமையிலான அரசாங்கம் 2000ஆம் ஆண்டில் வடக்கிலும் கிழக்கிலும் இருந்த தமிழ் பிரதேசங்களை ஒரே அலகாக இணைத்து, ஓரளவு சமஸ்டித் தன்மை வாய்ந்த பிராந்திய சபையை உருவாக்க முயன்றபோது, அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் வைத்து தீயூட்டி எரித்து ஆர்ப்பாட்டம் செய்த ரணில் தலைமையிலான ஐ.தே.கவுடனும், ஹெல உருமய, ஜே.வி.பி. போன்ற சிங்கள இனவாத கட்சிகளுடனும் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதை எதிர்த்து நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்து முறியடித்தனர். அப்படி ஏன் தாம் நடந்த கொண்டனர் என்பதற்கு தமிழ்த் தலைமையிடம் இருந்து இதுவரை எந்தவிதமான பதிலுமில்லை.

இவையெல்லாவற்றையும் செய்து தமிழ் மக்களின் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு, இப்பொழுது தமிழ் மக்களுக்கு இருக்கின்ற அரைகுறைத் தீர்வான மாகாண சபை முறையையும் இல்லாதொழிக்கும் புதிய அரசியல் அமைப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதின் மூலம் மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களின் முதுகில் குத்தி அவர்களுக்குத் துரோகம் இழைத்துள்ளனர். இந்தச் செயற்பாடுகள் எல்லாவற்றையும் தமிழ்த்தலைமைகள் தெரியாத்தனமாகவோ, அரசியல் அறிவீனம் காரணமாகவோ செய்யவில்லை. வேண்டுமென்றே செய்து வருகின்றனர்.

தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களுக்கு எதிராக இந்தத் துரோகங்களைச் செய்வதற்கு ஐ.தே.க. தான் எப்பொழுதும் துணை நின்று வருகிறது. இதற்கும் பல உதாரணங்கள் உள்ளன.

1965இல் அன்றைய டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.கவின் ஏழு கட்சி கூட்டரசாங்கத்தில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் இணைந்ததுடன், மந்திரி மற்றும் உப சபாநாயகர் பதவியும் பெற்றிருந்தன. அந்த அரசாங்கத்தில் மந்திரிப் பதவி பெறுவதற்கு இந்தப் பெரிய தமிழரசுக் கட்சியில் ஆள் இல்லாமல் கொழும்புத் தமிழரான, தமிழ் பேசத் தெரியாத மு.திருச்செல்வத்தை ஐ.தே.க. தமிழரசுக் கட்சிக்கு இரவலாகக் கொடுத்து அவரை மந்திரியாக்கியது. திருச்செல்வம் தமிழரசுக் கட்சிக்கும் ஐ.தே.க. அரசாங்கத்துக்கும் தரகராகச் செயற்பட்டார். அதன் மூலம் சாதித்ததெல்லாம் ஒரு அதிகாரமுமில்லாத மாவட்ட சபைகளை வழங்குவதாகச் சொல்லி பின்னர் அதையும் வழங்காமல் ஏமாற்றியதுதான்.

பின்னர்1977இல் தமிழ் ஈழம் கோரி தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குக் கொள்ளையடித்து, சந்தர்ப்பவசத்தால் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டு, ஜே.ஆர். அரசுடன் கூடிக்குலாவி ஒரு அதிகாரமும் இல்லாத (ஒரேயொரு விருத்தி என்னவெனில் டட்லியின் ‘மாவட்ட சபை’யில் இல்லாத ஒரு சொல் ‘அபிவிருத்தி’ என்ற சொல் கூடுதலாகச் சேர்க்கப்பட்டதுதான்) மாவட்ட அபிவிருத்தி சபையைப் பெற்று அதையும் நடைமுறைப்படுத்த முடியாமல் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பின்னர் சந்திரிக காலத்தில் இன்னொரு கொழும்புத் தமிழரான முன்னைய திருச்செல்வத்தின் மகனான நீலன் திருச்செல்வத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக்கி, அவரை சந்திரிக அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையிலான தரகராக வைத்திருந்தனர். அவரை புலிகள் தற்கொலைக் குண்டுதாரி மூலம் ஒழித்துக் கட்டியதும் அந்தக் கதையும் முடிந்தது.

தற்போது இன்னொரு கொழும்புத் தமிழரான சுமந்திரனை முதலில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினராகவும் ஆக்கி இன்றைய மைத்திரி – ரணில் வலதுசாரி அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான தரகராக வைத்து காரியங்கள் நடைபெறுகின்றன. சுமந்திரனை ஐ.தே.கதான் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இரவலாக வழங்கியது என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

இப்படியாக, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களுக்கு குழி தோண்டும் வேலையைத்தான் தமிழ்த் தலைமைகள் கொழும்பு ஐ.தே.க தரகர்களின் உதவியுடன் செய்து வந்திருக்கின்றன. இப்பொழுது அந்த வேலையை சம்பந்தன் - சுமந்திரன் - மாவை சேனாதிராசா குழு பொறுப்பெடுத்துச் செய்து வருகின்றது. ஆனால் ஒரு வித்தியாசம் என்னவெனில் இதற்கு முன்னர் சிங்களப் பேரினவாதத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட போதெல்லாம் தமிழ்த் தலைமைகள் மறைமுகமாக ஆதரித்து வந்தன. ஆனால் இந்தத் தடவை சமபந்தன் தலைமையிலான குழுவினர் வெளிப்படையாகவே தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படத் துணிந்துவிட்டனர். அதற்குக் காரணம் தமிழ் மக்கள் கொடுத்த இடம்தான்.

உண்மையில் இப்பொழுது செய்ய வேண்டியதெல்லாம் இரண்டு விடயங்கள்தான்.

ஒன்று, அரசாங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து திட்டமிட்ட முறையில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைகளை இல்லாதொழிக்க எடுக்கும் முயற்சிகளை முறியடிப்பதுடன், மாகாண சபை முறையை அதன் முழுமையான அர்த்தத்தில் நடைமுறைப்படுத்தும்படி கோரி இயக்கம் நடாத்துவது. வேண்டுமானால் அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வது.

இரண்டாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகத்துக்குப் பதிலடியாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் மக்கள் சக்தியைக் கொண்டு கூட்டமைப்பைத் தோற்கடிப்பது.

‘மந்திரத்தால் மாங்காய் விழுத்த முடியாது’ என்பது போல, சும்மா இருந்து இவற்றைச் சாதிக்க முடியாது. இவற்றைச் சாதிப்பதற்கு எமக்கு முன்னால் உள்ள ஒரே வழி, மக்கள் விசுவாசமும், நேர்மையும் உள்ள அனைத்து தமிழ் தேசியவாத, ஜனநாயக, முற்போக்கு சக்திகளும் தமது கடந்த கால அரசியல் மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகளைக் களைந்து ஓரணியில் நின்று செயற்படுவதுதான். அதைத் தவிர வேறு எந்தக் குறுக்கு வழியும் இல்லை.

பாசிசப் புலிகளை ஒழிப்பதற்கு இலங்கை அரசும், சில சர்வதேச சக்திகளும் உதவின. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனும் இந்த நாசகார சக்தியை ஒழித்துக் கட்டுவதற்கு மக்கள் சக்தியும் ஒற்றுமையும் என்ற எமது சொந்தச் கால்களில் தங்கி நின்றுதான் இதைச் சாதிக்க முடியும் என்பதை நாம் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

‘முயற்சி திருவினையாக்கும்’.

# மக்கள் விரோத, தேச விரோத வரவு செலவுத்திட்டம்!

நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் சமர்ப்பிக்கப்படடுள்ள 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்பார்கப்பட்டது போலவே மக்கள் விரோத, தேச விரோதமான ஒன்றாக அமைந்துள்ளது. ஆனால் எதிர்பார்த்தது போலவே போலி எதிர்க்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அரசின் தயவில் வாழும் இதர சிறிய கட்சிகளும் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. இந்த மக்கள் விரோத அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதற்கு உதவியதுடன், அதன் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவும் அளித்து வந்த ஜே.வி.பி., அரசுக்கு மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் எதிர்ப்பை கவனத்தில் கொண்டும், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை மனதில் கொண்டும் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளது. உண்மையில் இந்த வரவு செலவுத் திட்டத்தை மக்களினதும் தேசத்தினதும் நலனை மனதில் கொண்டு எதிர்த்து வாக்களித்தது கூட்டு எதிரணி மட்டுமே.

கடந்த அரசாங்கத்தில் 131 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி இந்த அரசாங்கத்தில் 156 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதேபோல கடந்த அரசாங்கத்தில் 5.7 வீதமாக இருந்த துண்டுவிழும் தொகை இன்று 7.6 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த ஆட்சியில்




1,855 பில்லியனாக இருந்த அரச செலவீனங்கள் இன்றைய ஆட்சியில் 3001 பில்லியனாக, 61 வீதத்தால் அதிகரித்துள்ளது.

உண்மையில் பெரும் முதலாளிகளின் கட்சியான ஐ.தே.க. தலைமையிலான ஒரு அரசாங்கத்தில் இருந்து இதைத் தவிர வேறு விதமான வரவு செலவுத் திட்டமொன்றை எதிர்பார்க்க முடியாது. அதுவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்பாக அமெரிக்கா சென்று அங்குள்ள உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக வட்டிக்கடைக்காரர்களின் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக பல நாட்கள் ஆலோசனை நடாத்திய பின்னரே இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளார் என்பதை அவதானிக்கும் போது, இதன் உள்ளடக்கம் எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிப்பதில் சிரமம் ஏதும் இருக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆணைப்படி தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின தேசிய பொருளாதாரததைக் கட்டியெழுப்புவதற்கான எந்தத் திட்டங்களும் இல்லை. மக்கள் மீதும், அரச நிறுவனங்கள் மீதும் ஏராளமான மறைமுக வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. அரச நிறுவனங்களைச் சீரமைக்கும் திட்டங்கள் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. இதன் அர்த்தம் அரச சேவைகள் தனியார்மயப்படுத்தப் போகின்றன என்பதே. அதேபோல எமது கல்விச் சேவை பழமையானது என்பதால் அதை மாற்றப் போவதாக நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதன் அர்த்தம் கல்விச் சேவை தனியார்மயப்படுத்தப்படப் போகின்றது என்பதே. இந்த வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் பெருந்தொகையான நிதி எவ்வாறு ஈடுகட்டப்படப் போகின்றது என்ற ஆலோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. இதன் அர்த்தம் நாட்டின் வளங்களை அந்நியருக்கு விற்று அல்லது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றில் அறாவட்டிக்குக் கடன் வாங்கி அந்தத் தொகை நிரப்பப்படும் என்பதே அதன் அர்த்தம்.

ஏற்கெனவே இலங்கையின் கடன் தொகை பத்து இலட்சம் கோடி ரூபாவைக் கடந்துள்ளது. அதாவது இலங்கையர் ஒவ்வொருவரினதும் தலையில் கடந்த 70 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் தலா ஐந்து இலட்சம் ரூபாவை கடனாகச் சுமத்தியுள்ளன. அந்தத் தொகை இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இரு மடங்கானால் ஆச்சரியமில்லை.

# இலங்கையில் 2016இல் 9 இலட்சம் கிலோ போதைப் பொருட்கள் சிக்கின!

இலங்கையில் 2016இல் நாடு முழுவதும் 9 இலட்சம் கிலோ போதைப் பொருட்கள் சிக்கியுள்ளதாக தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (National Dangerous Drugs Control Board) தெரிவித்துள்ளது.

இதில் ஹெரோயின் 2 இலட்சத்து 6 ஆயிரத்து 693 கிலோ, கஞ்சா 41 ஆயிரத்து 24.5 கிலோ, ஹசிஸ் 6 இலட்சத்து 69 ஆயிரத்து 138 கிலோ, தவிர பாபுல், மதன லேகியம், ஹான்ஸ், பான்பராக், புகையிலைத்தூள் என்பனவும் இவற்றில் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் கூடுதலான தொகை தலைநகரான கொழும்பு நகரம் அமைந்திருக்கும் மேல் மாகாணத்திலேயே கைப்பற்றப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இந்த போதைப் பொருள் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டோரில் 80 சத வீதமானோரும் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. போதைப் பொருட்களுக்கு அடிமையானோரில் 2,355 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

இந்தப் போதைப் பொருட்களில் பெரும்பாலானவை இந்தியாவிலிருந்து கடத்தி வரப்டுவதாகக் கூறப்படுகிறது.

கைப்பற்றப்பட்டவையின் தொகை இவ்வளவு என்றால், அகப்படாமல் மக்களின் பாவனைக்குச் சென்றவையின் தொகை எத்தனை மடங்காக இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்!